விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 167 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 21 திங்கட்கிழமை (03.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### சீரற்ற காலநிலை

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று 3ஆம் திகதி திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற வானிலையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு

15

## குளத்தில் தவறிவிழுந்து சகோதரிகள் இருவர் உயிரிழப்பு

### ஊர்காவற்றுறையில் சோகம்

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை குளம் ஒன்றினுள் துவிச்சக்கரவண்டியுடன் விழுந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதர சிறுமிகள் உயிரிழந்த பரிதாபச் சம்பவம்

15





## கொட்டித் தீர்க்கிறது கனமழை

# பாய்ந்தோடுகிறது வெள்ளம்

# பரிதவிக்கிறது தென்னிலங்கை



(கொழும்பு)

தென்னிலங்கையில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் காற்றுடன் கூடிய கனமழை காரணமாக தென் பகுதி முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதனால் அங்கு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதுடன் பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளனர்.

(04ஆம் பக்கம் பார்க்க)



## ரணில் - மகிந்த 5ஆம் திகதி சந்திப்பு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான முக்கிய அறிவிப்பினை அரசாங்கம் அறிவிக்கவுள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும்

15

## அரசாங்கம் பௌத்தத்துக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என்கிறது அரசியல் சாசனம்

### மாற்றம் வேண்டின் அரசியல் யாப்பையே மாற்ற வேண்டும்

### – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

அரசியலமைப்புக்கு அமைவாக, ஆட்சி அமைக்கின்ற எந்த அரசாங்கமாக இருந்தாலும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகம, கிரிவத்துடுவவில் நிர்மாணிக்கப்பட்ட குருதேவ சுவ அரண என்ற பிக்குகளுக்

15

## கிணற்றுக்குள் விழுந்து சிறுவன் உயிரிழப்பு

### கைதடியில் சம்பவம்

(கைதடி)

தண்ணீர் அள்ளச் சென்ற ஆறு வயதுச் சிறுவன் கிணற்றுக்குள் தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் கைதடி கோவிலாக்கண்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஹெரிஸ்ராஜ் என்ற சிறுவனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவராவார்.

15

## யாழிலும் நேற்று காற்றுடன் மழை

### சில இடங்களில் மின்சாரமும் தடை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவும் அசாதாரண சுழல்நிலை காரணமாக தென் இலங்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை யாழில் சில பிரதேசங்களில் கடும் காற்றுடன் மழை பொழிந்துள்ளது.

குறிப்பாக வடமராட்சி மற்றும் தென்ம

15

## கனமழை குறித்து சிவப்பு எச்சரிக்கை

### அவசர தொடர்பு இலக்கங்களும் அறிவிப்பு

(கொழும்பு)

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகளவான கனமழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லடக்க அறிவித்தல்



## பியூலா ஞானவதனன்

யாழ்ப்பாணம் ஊரெழுவைப் பூர்வீகமாகவும் கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடா - Toronto, Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பியூலா ஞானவதனன் 27.05.2024 அன்று கனடாவில் காலமானார். அன்னார் ஞானவதனனின் (யா/அருணோதயா கல்லூரி, அளவெட்டி 82 OL, 85 AL) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா செல்வரட்ணம் (கனடா) - மற்றும் சாரதாதேவி (கனடா) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற மார்க்கண்டன் (ஓய்வுபெற்ற அதிபர்- JP) மற்றும் ஞானம்மா தம்பதிகளின் மருமகளும் மீரா (கனடா), ராஜூ (ஜெர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஜாக் அன்ரனி ரேய்மேன்ட் (கனடா) மற்றும் சுபேந்திரனி (ஓய்வுபெற்ற ஆசிரியை, பருத்தித்துறை), மதிவதனன்(கனடா), ஜெயவதனன் (பண்டத்தரிப்பு வைத்தியசாலை), கிருபாகனி(ஆசிரியை- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), அருள்வதனன்(ஆசிரியர்-ஒட்டமாவடி மத்தியகல்லூரி), ரூபவதனன் (சிரேஷ்ட விரிவுரையாளர் ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற வண. பஞ்சரட்ணம் (மெதடிஸ்த திருச்சபை) மற்றும் பாமா (கனடா), உதயகுமாரி, அன்ரனி பெனடிக்ற் (உரிமையாளர் கிருபாகனி புத்தகசாலை, ஊர்காவற்றுறை), பிறின்சி அனிற்றா (ஆசிரியை- ஒட்டமாவடி ஷரீவ் அலி வித்தியாலயம்), பனோஜா (தாதிய உத்தியோகத்தர்-யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் சகலியும் பொனோபர், கிறிஸ்ரோபர், அபிஷன் ஆகியோரின் மாமியும் ப்ரியங்கா, சோபியா, ஆசிஹா ஆகியோரின் சித்தியும் காயத்திரி, சூரியகங்கேரி, ஜெயராஜ், சூரியராஜ், ஆசியசங்கரி, அபிமா, ரமோனா, மார்க் ரவின் ஆகியோரின் பெரியம்மாவும் ராஜ் மயூரன் மற்றும் ரோஜினியின் மாமியும் விவேகன், ராஜ் அதிமேதகன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 03.06.2024 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு (மாலை 5.30 மணி இலங்கை நேரம்) 30 Bramwin Court Brampton L6T 5G2 இல் அமைந்துள்ளது Brampton Cremation and Visitation Centre இல் நடைபெற்று, 6933 Tomken Road Mississauga Ontario L5T 1N4 இல் அமைந்துள்ள கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"மதிபதி",மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். (1075) *தகவல்:* மார்க்கண்டன் குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்


## பொன்னையா பெருமாள்பிள்ளை

நவற்கிரி புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பெருமாள்பிள்ளை அவர்கள் 01.06.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 03.06.2024 இன்று 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நிலாவரையில் உள்ள மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல்:* குடும்பத்தினர் (1073)



தோற்றம் 17.01.1943 மறைவு 01.06.2024

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் தம்பிராசா

(ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் - யாழ்.மாநகர சபை)



அல்வாய் வடமேற்கு திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வியாபாரிமூலை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தம்பிராசா (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் - யாழ்.மாநகர சபை) கடந்த 01.06.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் பத்மநாதன் - இராசலட்சுமியின் அன்பு மருமகனும் மீனலோசனியின் (இளைப்பாறிய விஞ்ஞான ஆசிரியை - யா/ஹாட்லிக் கல்லூரி) அன்புக் கணவரும் நவரட்ணம் (அமரர்), இராசதுரை, தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகநாதன் (ஓய்வுபெற்ற உயிரியல் ஆசிரியர்), கமலலோசனி, பத்மலோசனி (கண்டி), சந்திரலோசனி (ஐக்கிய இராச்சியம்), கேதீஸ்வரன் (விசேட தோல் வைத்திய நிபுணர் - பண்டாரவளை), செந்தில்நாதன் (கனடா), சோதிநாதன் (ஐக்கிய இராச்சியம்) ஆகியோரின் மைத்துனரும் சாருமதி, கிருஷ்ணராஜா, செல்வமோகன், முஜிதா, வினோபா, இசைவாணி மற்றும் ஆனந்தாதேவி, கருணானந்தன் (அமரர்) ஆகியோரின் மைத்துனரும் கீகா (கனடா), யசோதரன் (கனடா), சசிதரன் (சிங்கப்பூர்), பகிதரன் (கொழும்பு) ஆகியோரின் சித்தப்பாவும் அச்சுதன், நிமலன், ஆனந்தன், ஆர்த்தி, தாரணி, மயூரன் ஆகியோரின் பெரியப்பாவும் பகீரதன், ஜனகன், அருணன், மயூஸ், நரேன், மதுரன், அஞ்சனா, சாதனா, அனுஷா, குணாளன், சபாநாயகம், சுபாஷினி, கங்கா, பிரியந்தி ஆகியோரின் மாமனாரும் அருணன், நிருஜா, ஜுலி, துஸ்யந்தி ஆகியோரின் சித்தப்பாவும் ரதன், நிஷாலி, ஓவியா, தென்றல், சாசினி, ஹாசினி, அகரன், அவினி, அயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2024) பி.ப 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
தொ.இல: 021 226 4441

(C-0512)

# உடனடி வேலை வாய்ப்பு

கொழும்பில் இயங்கி வரும் SATTELITE மற்றும் கேபிள் டிவி உபகரணங்கள் விற்பனை மற்றும் சர்வீஸ் செய்யும் கடைக்கு

- ♦டிஷ் ஆன்டென்னா பிட்டிங் செய்யக் கூடிய TECHNICIANS.
- ♦எலக்ட்ரானிக்ஸ் REPAIR செய்யக் கூடிய TECHNICIANS.
- ♦வேலை பழக விரும்பும் O/L அல்லது A/L படித்த இருவர் தேவை

உணவு தங்குமிடம் மற்றும் திறமைக்கு ஏற்ப சம்பளம் கிடைக்கும், வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது உடன் தொடர்பு கொள்ளவும்.

ராஜன் 077 771 0785 (1070)

# சேவைகள்

A/L. O/L பரீட்சை எழுதிய மாணவர்கள் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் வகையில் வர்த்தக துறையில், கணக்குத் துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு பயிற்சியின் மூலம் தொழிலினைப் பெற்றுக் கொள்ள.

தொடர்புகளுக்கு :- 076 315 6470 (C-0509)

# விற்பனைக்கு

கல், மண் இடிபாடுகள்
ஓடுகள், தீராந்திகள், இரும்புக் கேற்றுகள், 3 நாச்சாரம் வீடுகள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 723 2535 (C-0511)

# நாகபூஷணி திருமண சேவை

பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்

மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்யப்பட்டு மிகத் துரிதமாகத் திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்

**10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்**
**(BCAS கம்பஸுக்கு பக்கத்து லேன்)**
**021 222 9306, 077 138 7596, 071 999 9306** (1074)

# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பதினெட்டடிப் பாதை (18)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது

(குரு) 077 029 4164, 077 329 4130, 077 294 1521 (1072)

# விற்பனைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 4 பரப்புக் காணியும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நவசிவாயம் வித்தியாசாலைக்கு முன்பாக 4 பரப்பும் 4 குளியும் சுற்று மதிலுடன் கூடிய காணியும், யாழ் பிறவுண் வீதியில் நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 2 பரப்பில் அமைந்த புதிய மாடி வீடும், 2 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.


தொடர்புகளுக்கு :
0777 23 25 35 (C-0511)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவதை சட்டத்தை உருவாக்கக்கோரி அராலியில் போராட்டம் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

**"இலங்கை நாட்டில் பசுவதைத் தடைச் சட்டத்தினை உருவாக்கு மாறும், நாடு முழு வதும் ஏழை மக்களின் மாடுகள் களவாடப்பட்டு சட்ட விரோதமான முறையில் இறைச்சிக்காக படுகொலை செய்யப் படுவதை நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியும்" அரசிடம் கோரிக்கை வைக்கும் அறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**





அராலி தெற்கு வாழ் பொது மக்களுடன் இணைந்து உருத்திர சேனை அமைப்பினர் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி அளவில், அராலி கருப்பட்டி பிள்ளையார் கோவில் அருகே குறித்த போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டத்தில் பசுக்கள், வள்ளுவர் சன சமூக நிலையத் தலைவர்,சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன், பொது மக்கள், மாணவர்கள், உருத்திர சேனையினர் எனப் பலரும் பங்கு பற்றியிருந்தனர். (நி-6)

# அநுர லண்டன் விஜயம்

(கொழும்பு)

தேசிய மக்கள் படையின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க பிரித்தானியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் பிரித்தானியாவிலுள்ள இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றும் பல பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக இந்த விஜயம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அநுரகுமார திசாநாயக்க அண்மையில் கனடா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# உலகக் கோப்பை தொடர்
# 7 விக்கெட் வித்தியாசத்தில்
# வென்றது அமெரிக்க அணி



ரி-20 உலகக்கோப்பை தொடரில் முதல் போட்டியில் கனடாவிற்கு எதிராக 7 விக்கெட் வித்தியாசத்தில் அமெரிக்கா அணி வெற்றி பெற்றுள்ளது.

20 நாடுகள் பங்கேற்கும் உலகக் கோப்பை ரி-20 கிரிக்கெட் போட்டி அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகள் நாடுகளில் ஜுன் 1 ஆம் திகதி தொடங்கி ஜுன் 29 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

இந்திய நேரப்படி நேற்று முன்தினம் அதிகாலை 6 மணியளவில் ஏ பிரிவில் இடம் பெற்றுள்ள அமெரிக்கா, கனடா அணிகள் பங்கேற்ற தொடரின் முதல் போட்டி தொடங்கியது. டொஸ் வென்ற அமெரிக்கா அணி முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

இதையடுத்து களமிறங்கிய கனடா அணியில் ஆரோன் ஜான்சன் 23 ரன்களும், நவ்நீத் தலிவல் 61 ரன்களும், நிக்கோ லஸ் கிரிட்டன் 51 ரன்களும், ஸ்ரேயாஸ் மோவா 32 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இதை அடுத்து 20 ஓவர் முடிவில் அந்த அணி 5 விக்கெட்டுகளை இழந்து 194 ரன்களை எடுத்தது.



அமெரிக்கா தரப்பில் அலி கான், ஹர்மித் சிங், கோரி ஆண்டர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தி இருந்தனர். 195 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அமெரிக்கா அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் ஸ்டீபன் டைலர் ரன் எதுவும் எடுக்காமல் ஆட்டம் இழந்து அதிர்ச்சி அளித்தார். அடுத்து வந்த கப்டன் மொனாங் பட்டேல் 16 ரன்களுக்கு வெளியேறினார். பின்னர் ஜோடி சேர்ந்த ஆண்ட்ரீஸ் கவுஸ் மற்றும் ஆரோன் ஜோன்ஸ் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

கவுஸ் 65 ரன்கள் எடுத்திருந்த போது ஆட்டம் இழந்த போதும், மறுமுனையில் ஜோன்ஸ் நிலைத்து நின்று ஆடி ரன்களைச் சேகரித்தார்.

இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த அவர், 40 பந்துகளில் 4 பவுண்டரிகள், 10 சிக்சர்கள் உட்பட 94 ரன்களை குவித்தார். இதன் மூலம் 17.4 ஓவர் முடிவில் அந்த அணி 3 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 197 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக ஆரோன் ஜோன்ஸ் தேர்வு செய்யப்பட்டார். (நி)




## பாய்ந்தோடியது...

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி உள்ளடங்கலாக ஒன்பதுக்கும் மேற்பட்ட மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் அனர்த்த நிலைமைகள் காரணமாக கடந்த 48 மணி நேரத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றி இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர்.

நேற்று பல பகுதிகளில் 300 மில்லி மீட்டருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகி உள்ளது.

தொடர்ச்சியாக பெய்துவரும் கன மழையின் எதிரொலியால், பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், ஆங்காங்கே நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளது. 4 மாவட்டங்களுக்கு நிலச்சரிவுக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கனமழையால் ஏற்பட்ட விபத்துகளில் இதுவரை தலைநகர் கொழும்பு உட்பட 7 மாவட்டங்களில் 15 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், சுமார் 19 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

25 நிர்வாக மாவட்டங்களில் 20 மாவட்டங்கள் கன மழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

4000க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. மீட்புப் பணிகளுக்காக படகுகளுடன் கூடிய 7 குழுக்களை இராணுவம் அனுப்பி வைத்து உள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி அவசர நடவடிக்கைக்காக விமானப்படை 3 ஹெலிகாப்டர்களை தயார் நிலையில் வைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

மழை நீடிக்கும் என்பதால், இலங்கை முழுவதும் சகல பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. (ந-7,10)

# கிரிக்கெட்டுக்கு 'குட் - பை' சொன்ன தினேஷ் கார்த்திக்



அனைத்து வித கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக இந்தியா அணி வீரர் தினேஷ் கார்த்திக் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தனது 39 ஆவது பிறந்த நாள் கொண்டாடிய தினேஷ் கார்த்திக், அனைத்து வித கிரிக்கெட் போட்டிகளில் இருந்து விடைபெறுவதாக அறிவித்தார். இதுகுறித்து கார்த்திக் வெளியிட்ட செய்தியில், "ஓய்வு முடிவை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறேன். எனது கிரிக்கெட் பயணத்தில் பங்கேற்ற பயிற்சியாளர், தேர்வு குழுவினர், கப்டன், சக வீரர்களுக்கு நன்றி," என்றார்.

இந்திய கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக். தமிழகத்தைச் சேர்ந்த விக்கெட் கீப்பர் பட்டரான இவர், தனது 10 வயது முதல் கிரிக்கெட் விளையாடி வருகிறார். தொடக்கத்தில் பட்டராக களமிறங்கிய கார்த்திக், பின் தமிழக யூத் அணியில் முதன்முறையாக விக்கெட் கீப்பர் பயிற்சி மேற்கொண்டார். 1999 ஆம் ஆண்டு 14 வயதுக்குட்பட்ட தமிழக அணியில் அறிமுகமானார். பின், 19 வயதுக்குட்பட்ட அணியில் (2000-2001) இடம் பிடித்தார். கடந்த 2002 இல் பரோடா அணிக்கு எதிரான முதல் தர போட்டியில் விக்கெட் கீப்பராக அறிமுகமானார்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் 2004 இல் அறிமுகமான தினேஷ் கார்த்திக், கடந்த 20 ஆண்டுகளாக விளையாடி வருகிறார். கடைசியாக 2022 இல் அடிலெய்டில் நடந்த வங்கதேசத்துக்கு எதிரான "ரி-20" உலகை கோப்பையில் விளையாடினார்.

ஐ.பி.எல்., அரங்கில் டில்லி, பஞ்சாப், மும்பை, குஜராத், கொல்கத்தா அணிகளுக்காக விளையாடிய இவர், கடைசியாக 17 ஆவது சீசனில் பெங்களூரு அணி சார்பில் பங்கேற்றார். தேசிய அணியில் இடம் கிடைக்காததால் வர்ணனையாளராக செயற்பட்டு வருகிறார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் 63 ஆவது பிறந்தநாளினை முன்னிட்டு அறநிதியச் சபை நடத்திய இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு நேற்று சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்வில் கொழும்பு லங்கா மருத்துவமனை இருதயசத்திர சிகிச்சை நிபுணர் ஞானச் சந்திரமூர்த்தி காந்திஜி, திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் ஹரிகரன் தன்வந்த் ஆகியோருக்கு குறித்த விருது வழங்கப்பட்டது.

# மாலைதீவு அமைச்சர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

மாலைதீவு வெளி விவகார அமைச்சர் மூசா ஜமீர் இன்று இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின் போது மாலைதீவு வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது குழுவினர் வெளிவிவகார அமைச்சில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் உத்தியோகபூர்வ இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை மாலைதீவின் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவும் வெளிவிவகார அமைச்சருடன் இந்த விஜயத்தில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

# கசிப்பு உற்பத்தி நிலையம் கொடிகாமத்தில் முற்றுகை

## 50 லீற்றர் கசிப்பு மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லாரை காட்டுப் பகுதியொன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கசிப்பு உற்பத்தி நிலை யம் பொலிஸாரால் முற்று கையிடப்பட்டதில் அங்கிருந்த 50லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரணசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இருப்பினும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் தப்பித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய காஸ் சிலிண்டர் உள்ளிட்ட பொருட்களையும் பொலிஸார் மீட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

# தொடரும் சீரற்ற வானிலை

## பல பகுதிகளுக்கு மின்துண்டிப்பு

(கொழும்பு)

காலி, களுத்துறை, இரத்தினபுரி, கொழும்பு மற்றும் கேகாலை மாவட்டங்களில் பல பகுதிகளில் பாதுகாப்புக் கருதி மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வெள்ளத்தால் பாலம் சேதமடைந்ததால் அவிசாவளைக்கும் வகவுக்கும் இடையிலான ரயில் சேவைகள் முற்றாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளுக்கு கடும் மழை தொடர்பான சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 150 மில்லி மீற்றருக்கு அதிக மழை வீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (நி-6)

# அச்சுறுத்தும் அடைமழை ஐவர் உயிரிழப்பு

(கொழும்பு)

புவக்பிட்டிய பிரதேசத்தில் வெள்ளத்தில் மூழ்கி 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

36 மற்றும் 7 வயதுடைய இரண்டு பெண்களும் 78 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, தெய்யந்தர, பல்லேவெல பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஒருவர் காயமடைந்து எல்லேவெல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெனகம பிரதேசத்தில் வசிக்கும் 20 மற்றும் 27 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் எல்லேவெல மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை டீயெந்தர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை சீரற்ற கால நிலை காரணமாக 3834 குடும்பங்களைச் சேர்ந்த 13717 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி)

# மாணவர்கள் மத்தியில் அதிகரிக்கும் புகையிலைப் பொருட்களின் பாவனை

(கொழும்பு)

இலங்கையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகையிலைப் பொருட்களின் பாவனை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர், வைத்தியர் ஷாக்கிய நாணயக்கார இதனைத் தெரிவித்துள்ளார். [illegible] தற்போது பாடசாலைகளில் பெருகி வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சர்வதேச ரீதியாக இ-சிகரெட்டுக்களின் பாவனை அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இ-சிகரெட்டுக்கள் மூலம் நிகோடின் பழக்கம் அதிகரிப்பதுடன் இது உடலிற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

நிகோடின் பயன்பாட்டால் தலைச்சுற்றல், வாந்தி மற்றும் பொதுவான உடல் அசௌகரியம் போன்ற பாதகமான விளைவுகள் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, நிகோடினின் ஆபத்துக்கள் குறித்து சிறுவர்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டிய பொறுப்பு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உள்ள தாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் வைத்தியர் ஷாக்கிய நாணயக்கார தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமான வரிப்பத்திரம் வழங்கல் மீள ஆரம்பம்

## வடமாகாண மோ.வாகனப் போக்குவரத்து திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கிடையிலான வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் செயற்பாடுகள் இன்று 03.06.2024 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்படுகின்றது.

வாகன வருமானவரிப் பத்திரமானது ஏற்கனவே உள்ள நடைமுறைகளுக்குட்பட்டு நாடளாவிய ரீதியில் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களுக்குமான வாகன வருமானவரிப் பத்திரம் வழங்கும் செயற்பாடானது எந்தவொரு பிரதேச செயலகங்களது கர்மபீடங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் இதுவரை காலமும் வாகன வருமான வரிப்பத்திரமானது இணையவழி மூலம் இலகுரக வாகனங்களுக்கு மட்டுமே பெற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்பட்ட போதிலும் இனிவரும் காலங்களில் இணையவழி மூலம் Ambulance,Hearse,Lorry Trailer,Motor Lorry,Private Coaches & Special Purpose Vehicle போன்ற வாகனங்களுக்கும் குறித்த இணைப்பின் மூலமாக பெற்றுக் கொள்ள முடியும் என வட மாகாண வாகனப் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் திருமதி. சி.சுஜீவா அறிவித்துள்ளார். (நி-6)

# தமிழ் பொது வேட்பாளர் என்பது கல்லில் நார் உரிக்கும் செயற்பாடு

## விநோ.எம்.பி காட்டம்



(மன்னார்)

பிரபாகரன் உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழித்தவர்கள், தாமே ஓரணியாக வர முடியாத நிலையில் மக்களை ஒன்று படுத்தப் போவதாகக் கூறுவது வேடிக்கையானது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது கல்லில் நார் உரிக்கும் செயற்பாடு என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.


அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும் ஒன்றுபட போவதில்லை. பதவிப் போட்டிகளைத் தீர்க்க முடியாத கட்சிகள் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறுவது ஏமாற்று வேலையாகும்.

ஒற்றுமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தே சில நூறு வாக்குகளால் தான் சம்பந்தன் ஐயா வென்றார்.

இப்போது பிரிந்திருப்பது திருமலையை பறி கொடுக்கத்தான். வன்னியிலும் இதே நிலைதான் பிரிந்து சென்றால் ஏற்படும்.

இப்படியிருக்க ஜனாதிபதித் தேர்தலில் இராமன் வென்றாலும் இராவணன் வென்றாலும் ஒன்றுமே நடக்கப்போவதில்லை என சொல்லிக் கொண்டு முட்டாள் தனமான முடிவுகளை எடுக்காமல் புத்திசாலித் தனமாக நடந்து கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் மேலும் தெரிவித்தார். (நி-6)

# நல்லைக் கந்தனுக்கு சகஸ்ரசங்காபிஷேகம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக தினமாகிய நேற்று காலை மூலஸ்தானத்தில் வீற்றுள்ள வேல்பெருமானுக்கு அந்தண சிவாச்சாரியார்கள் 1008 சங்குகளால் சகஸ்ர சங்காபிஷேகம் இடம் பெற்று மாலை தண்டிகை உற்சவமும் இடம்பெற்றது. (நி-6-33)

# இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக்கோரி அரச சாரதிகள் சங்கம் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் இணைந்த சேவை சாரதிகளின் வருடாந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக்கோரி இன்று தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடப் போவதாக வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த போராட்டம் இன்று காலை 8 மணிக்கு ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் ஆரம்பமாகி பேரணியாக சென்று மகஜர் கையளிப்பதுடன் அதனைத் [illegible] தொடர்ந்து பிரதம செயலாளர் அலுவலகத் திற்கு சென்றும் மகஜர் கையளிக் கப்படவுள்ளது.

மேலும் குறித்த தொழிற் சங்க போராட்டம் எதிர் வரும் 7 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக [illegible]

# உயர்தர பரீட்சை பெறுபேறுகள்-2023

## யா/மகாஜனக் கல்லூரி-தெல்லிப்பழை

**கணிதப் பிரிவு**

ஜெ.டக்சன் -3ஏ, சி.ஜனுசிகன்-3ஏ, க.திலக்சன்-2ஏபி, இ.துசானன்-ஏபிசி, செ.சமீரணன்-ஏபிசி.

**வர்த்தகப் பிரிவு**

செ.டிலக்ஷிகா-3ஏ, ஆ.லக்ஷியா-ஏ2பி, நே.கிஷோர்-ஏ2பி, லி.நிஷாந்தி-ஏபிசி.

**உயிரியற் பிரிவு**

அ.சபிசன்-2ஏபி,ப.ஆரணன்-2ஏசி.

**கலைப்பிரிவு**

சி.தரணிகா-2ஏபி, செ.லக்சன்-2ஏபி, பு.ஜனுஷிகா-2ஏபி, அ.கனிஷ்ரா-2ஏபி, பு.பவிதா-2ஏபி, நி.சவித்தா-2ஏபி, அ.நவநீதன்-ஏ2பி, இ.சிவான்ஜன்-ஏ2பி, ம.வைஷ்ணவி-ஏ2பி, நி.கோமளன்-ஏபிசி, உ.லக்ஷி-ஏபிசி, லூ.பிரவீணா- ஏபிசி.

## சென்.பற்றிக்ஸ் கல்லூரி

**உயிரியற் பிரிவு**

வி.ஜீவிதன்-3ஏ, எஸ்.ஸ்ரோபன்ராஜ்-3ஏ, ஆர்.டேனிஷான்- 2ஏபி.

**கணிதப் பிரிவு**

கே.கபில்ராஜ்-3ஏ, ஜே.டபிள்யு. ஜக்ஷன்-3ஏ, எம்.ஸ்ரலன் றாஜ்-3ஏ, எல்.அபிஷ்லின்-2ஏபி, கே.செரோன் ரோஹித்-2ஏபி, எம்.எம்.அன்ரன் குரூஸ்வோன்-2ஏபி.

**வணிகப்பிரிவு**

என்.அட்சயன்-3ஏ, ஏ.சன்ஜித்-3ஏ, ஏ.வி.அபிலாஷ்-2ஏபி, ஆர்.எஸ்.மரின ஏபிசி, பி.ஹொட்பிரி ஜோயல்-ஏபிசி.

**கலைப்பிரிவு**

ஜெ.ஜெமில்-3ஏ, ஜெ.கஸ்ரோன்-2ஏபி, எஸ்.சமிந்தன்-2ஏபி, எஸ்.டனிஸ்ரன்- 2ஏபி, ஏ.பிரவீன்ராஜ்-ஏபிசி, ஏ.அமலதாஸ்-ஏபிசி, ஜெ.நேருஷன்-ஏபிசி, ஐ.மிதுன்சன்-ஏபிசி.

**பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு**

பி.ஜி.பெரின் கிறிஸ்காட்-3ஏ.

## விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி.

**கலைப்பிரிவு**

ம.பிரஷாளினி-3ஏ, ம.லத்திகா-2ஏபி, ச. ஜெயந்தன்-2ஏபி, சி.சிவப்பிரியா-ஏபிசி, ற.கஜரதன்-ஏபிசி.

**வணிகப்பிரிவு**

வே.தனுஷா-ஏபிசி

**கணிதப்பிரிவு**

க.கிஷானி 2ஏபி.

## யா/ஹாட்லிக் கல்லூரி

**கணிதப்பிரிவு**

ர.சுசாய்த்தனன்-3ஏ,கி.ஆதித்தன்-3ஏ, பா.லகீஷன்-3ஏ, ஜே.கவிராஜா-3ஏ, ஜெ.கலைப்பிரியன்-3ஏ, பா.சதுர்சன்-3ஏ, சி.பிதுஷன்-3ஏ, அ.ஸ்ரீநிகேதன்-3ஏ, யோ.அகல்யன்-3ஏ, ஜெ. தனுஷானந்-3ஏ, ப.நிலக்ஷன்-3ஏ, பு.மகீதன்-3ஏ, கு.ஜிலுக்ஷன்-3ஏ, ரா.அபிவர்மன்-2ஏபி, செ.விகாஷன்-2ஏபி.

**உயிரியல் பிரிவு**

பா.பானுஜன்-3ஏ, த.குகேஷன்-3ஏ, தி.கிரிதரன்-3ஏ, உ.பிரவீன்-3ஏ, அ.கவின்ஞல்-2ஏபி, சு.சுலெக்ஷன்-2ஏபி.

**பொறியியல் தொழில்நுட்பம்**

செ.ஸ்ரீமன்-3ஏ, அ.அன்ரனி விஜியதாஸ்-2ஏபி, ஸ்ரீ.கஜானனன்-2ஏபி, ச.விதுஷன்-2ஏசி, வ.மதிசுதன்-ஏ2பி, ச.சதோசன்-ஏபிசி.

**உயிரியல் தொழில்நுட்பம்**

ஜெ.சுமன்-3ஏ, ச.கனியரசன்-3ஏ, சி.கவிப்பிரியன்-2ஏபி.

**வணிகப்பிரிவு**

தி.தீபத்-3ஏ, மு.அனோஷியன்-2ஏபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார இராசிபலன் 02.06.2024 முதல் 08.06.2024 வரை

## மேஷம்

பயணங்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம் இது. தொழில், உத்தியோகம் சார்ந்து திடீர் பிரயாணங்கள் உண்டு. அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். ஆயுள் காப்பீடு, ரியல் எஸ்டேட், விவசாயத் துறையினருக்கு லாபகரமான காலகட்டம். குடும்பத்தினருடன் சேர்ந்து கடவுள் தரிசனம் செய்வீர்கள். நீண்ட காலமாக இருந்த கடன்களை முழுவதுமாகவோ, அதன் ஒரு பகுதியையோ திருப்பி செலுத்துவீர்கள். வெளியிடங்களில் அலைந்து திரிவதால் சலிப்பும், மன அழுத்தமும் ஏற்படும். கோபத்தையோ, உணர்ச்சியையோ யாரிடமும் காட்டி விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மற்றவர்கள் கேட்டால் தவிர ஆலோசனையோ, உதவியோ அளிப்பது கூடாது. உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பதுடன், மருத்துவ சிகிச்சையில் இருப்பவர்களுக்கு எச்சரிக்கை அவசியம்.

## ரிஷபம்

உறவினர்கள், நண்பர்கள் வீட்டு விஷேசங்களில் கலந்து கொண்டு மகிழும் வாரம். உத்தியோகஸ்தர்கள், தொழில் துறையினருக்கு புதிய தொடர்புகள் கிடைத்து ஆதாயம் ஏற்படும். கலைத்துறையினர் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த வாய்ப்புகளை பெற்று மகிழ்வார்கள். பல விடயங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியே முடித்து விடுவீர்கள்.

வெளிவட்டார பழக்கம் அதிகமாகும். மனதில் ஏற்படும் உற்சாகத்தால் எல்லோரிடமும் வெளிப்படையாக பேசி விட வேண்டாம்.

அத்துடன் புதிய நபர்களுடன் சேர்ந்து தொழில் முயற்சிகளில் ஈடுபடும் போது நன்றாக விசாரித்துக்கொள்ள வேண்டும். சுய தொழில் செய்ய வங்கி கடனுக்கு விண்ணப்பித்தவர்கள் அதை பெறுவார்கள்.

## மிதுனம்

பல கவலைகள் மனதில் இருந்தாலும் ஏதோ ஒரு இனம் புரியாத உற்சாகம் நிலவும் வாரம் இது. உத்தியோகம், தொழில் துறையினர் வெளியூர் பயணங்களை மேற்கொள்வார்கள். உடன் பிறந்தவர்கள் ஆதரவாக இருப்பார்கள். கணவன் - மனைவியிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பெண் நண்பர்கள் பொருளாதார உதவி செய்வார்கள்.

வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். தொழில், உத்தியோகம் தொடர்பாக வெளிநாடு, வெளி மாநிலம் செல்ல மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறும்.

சிறிய விடயமாக இருந்தாலும் ஒன்றுக்கு இருமுறை யோசித்த பின்னரே செயற்பட வேண்டும். வெளியிடங்களுக்கு செல்பவர்கள் உணவு, தண்ணீர் ஆகியவற்றில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

## கடகம்

முயற்சிகள் வெற்றி அளிக்கும் வாரம் இது. மனதில் உற்சாகம் பெருகும். தொழில், உத்தியோகத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டு புதிய நம்பிக்கை உருவாகும்.

இருந்தாலும் மனதில் ஏற்படும் ஒருவித நம்பிக்கையற்ற நிலையால் அவ்வப்போது குழப்பம் ஏற்படும். நண்பர்களுடன் பயணம், விருந்து என்று பொழுது போகும். விவசாயம், ரியல் எஸ்டேட் துறையினர் நல்ல லாபம் பெறுவார்கள்.

அரசியல்வாதிகளுக்கு மக்கள் அங்கீகாரம் கிடைக்கும். அரசு நிர்வாக பணியாளர்கள், சீருடை பணியாளர்கள் விரும்பிய உத்தியோக உயர்வு கிடைக்கப்பெறுவார்கள். பலருக்கு நீண்ட காலமாக மனதில் இருந்த விருப்பம் ஒன்று நிறைவேறும். அன்னையின் உடல் நலன் காக்கும் மருத்துவ செலவுகள் ஏற்படும்.

## சிம்மம்

மனதில் இருந்த சங்கடங்கள் அகலும் வாரம் இது. உத்தியோகம், தொழில் ஆகியவற்றில் புதிய பொறுப்புகளை ஏற்று கூடுதலாக உழைக்க வேண்டி வரும். செலவுகளை சமாளிக்க தனிப்பட்ட அவமானங்களை பொருட்படுத்தாமல் உறவினர்களிடம் கடன் பெறும் சூழல் ஏற்படும். நல்லதுக்கு காலமில்லை என்ற எண்ணம் மனதில் உருவாகும். விருப்பம் இல்லாவிட்டாலும் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டியதாக இருக்கும். அரசு பணியாளர்கள் சில நன்மைகளை அடைவார்கள். அரசு ஒப்பந்ததாரர்கள் புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து பணிகளை தொடங்குவார்கள். எதிர்பாராத சூழ்நிலைகளை துணிச்சலாக எதிர்கொண்டு நம்பிக்கையோடு தடைகளை கடந்து செல்லும் காலகட்டம் இது.

## கன்னி

அமைதியாகவும், பொறுமையாகவும் இருந்து காரிய வெற்றி பெற வேண்டிய வாரம். எந்தவொரு பயணமும் அவசியமாக இருந்தாலன்றி தவிர்ப்பதே நல்லது. அதனால் வீண் விரயங்கள் தவிர்க்கப்படும். உறவினர்கள் அளிக்கும் தொல்லைகளால் மனதில் சங்கடம் ஏற்படும். இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல் சகஜமாக இருப்பீர்கள். பலவித மனக் குழப்பங்களால் தூக்கம் இல்லாமல் தவிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் பணிகளை சிறப்பாக முடிப்பீர்கள். கூட்டுத்தொழிலில் உள்ளவர்கள் பங்குதாரர்களை முழுமையாக நம்பி செயற்பட வேண்டாம். இந்த வாரம் சொந்த தொழில் செய்பவர்கள் கூடுதல் முதலீடுகளை செய்யாமல் தவிர்க்க வேண்டும். புதிய கடன்களை இப்போது வாங்க வேண்டாம். தொலைபேசி மூலம் கிடைக்கும் செய்திகளால் மனதில் உற்சாகம் ஏற்படும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## துலாம்

உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய வாரம் இது. தொலைதூர பயணங்களை தவிர்க்க வேண்டிய கால கட்டமும் கூட. மற்றவர்களின் பணம் உங்கள் கையில் புரளும். சிலருக்கு மறைமுகமாக தன லாபம் ஏற்படும். குடும்ப உறுப்பினர்களிடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டு நீங்கும். உத்தியோகம், தொழில் துறையினர் அரசு தரப்பு தடை தாமதங்களை சந்திப்பார்கள். எதிர்பாராத சூழலில் எப்போதோ செய்த தவறு இப்போது நினைவுக்கு வந்து மன அமைதியை குலைக்கும். மனதை அமைதிப்படுத்த இனிமையான திரைப்பட பாடல்களை இரவில் கேட்டு மகிழ்வீர்கள். மற்றவர் செய்த தவறுக்கு நீங்கள் பொறுப்பாளியாக நிற்கும் சூழல் உருவாகும். இறை நம்பிக்கையால் சிக்கல்களை கடக்கும் மனத்திடம் உங்களுக்கு ஏற்படும்.

## விருச்சிகம்

அனைத்து தரப்பினருக்கும் உற்சாகம் அளிக்கும் வாரம் இது. அரசியல்வாதிகள் மக்கள் அங்கீகாரத்தை பெற்று பதவியில் அமர்வார்கள். வியாபாரிகள், தொழில்துறை, உத்தியோகத்தில் உள்ளவர்கள் மாற்றங்களால் முன்னேற்றத்தை சந்திப்பார்கள். குடும்ப உறவுகள் ஏற்படுத்தும் தொல்லைகளையும் எதிர்கொள்ள வேண்டும். உறவினர்கள், நண்பர்கள் உங்களை சந்திக்க வீடு தேடி வருவார்கள். கலைத்துறையினருக்கு நல்ல ஆதாயத்தை அளிக்கும் வாரம். விவசாயம், ரியல் எஸ்டேட் துறையினர் எதிர்பார்த்த லாபத்தை பெறுவார்கள். மற்றவர்களிடம் தொலைபேசியில் பேசும்போது அருகில் இருப்பவர்களை கவனித்து கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் மறைமுக எதிரிகளால் பல தொல்லைகள் ஏற்படும். வார இறுதியில் பயணங்களை தவிர்த்து அமைதியாக ஓய்வெடுப்பதே உடல் நலனுக்கு நல்லது.

## தனுசு

சிக்கலான சூழ்நிலையை பொறுமையாக கடந்து செல்ல வேண்டிய காலகட்டம் இது. இரவு நேர பயணங்களை இந்த வாரம் கண்டிப்பாக தவிர்த்து விடுவது அவசியம். தொழில், பணி சம்பந்தமாக மற்றவர்களை பகலில் மட்டுமே சந்திப்பது நல்லது.

உத்தியோகம், தொழில் துறையினருக்கு வார இறுதியில் நல்ல செய்திகள் வந்து சேரும். செலவோடு செலவாக கடன் வாங்கி சொந்த பந்தங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யும் சூழல் ஏற்படும். உணவு, உறக்கம் ஆகிய விடயங்களில் கட்டுப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும்.

ஒரு சிலர் மருத்துவமனையில் தங்கி மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டி வரும். செலவுக்கேற்ற வரவுகள் இல்லாததால் கடன் வாங்கி சமாளிப்பீர்கள்.

## மகரம்

மனதில் உற்சாகம் உருவாகும் வாரம் இது. நீண்ட நாளாக மனதில் இருந்த திட்டங்களை நிறைவேற்றும் சூழல் உருவாகும். அரசியல் துறையினர் மக்களது அங்கீகாரத்தை பெற்று விரும்பிய பொறுப்புகளில் அமர்வார்கள். உத்தியோகம், தொழில் துறையினருக்கு இது லாபகரமான வாரம்.

உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பிய இட மாற்றம் கிடைக்கும். தொழில்துறையினருக்கு லாபகரமான வாரம். நண்பர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பீர்கள். தொலைபேசி வழியில் பல நல்ல செய்திகள் வந்து சேரும்.

பலருக்கு புதிய பெண் நண்பர்கள் அறிமுகம் ஆவார்கள். ஜோதிடம், ஆன்மீகம், நீதித்துறை, விவசாயம், தங்கநகை வியாபாரம் ஆகிய துறையினருக்கு பொருளாதார உயர்வு உண்டு. மாணவர்களுக்கு பாராட்டுகள் கிடைக்கும்.

## கும்பம்

உத்தியோகம், தொழில் துறையினர் கூடுதலாக உழைத்து தங்கள் பெயரை காப்பாற்றிக்கொள்ள வேண்டிய காலகட்டம் இது. பண நெருக்கடிகளால் மன உளைச்சல் ஏற்படும். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

பெண்களுக்கு உடல் நலன் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சையால் நிவாரணம் ஏற்படும். சொந்த தொழில் செய்பவர்களுக்கு உழைப்புக்கேற்ற லாபம் கிடைக்கும் வாரம் இது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சொந்த தொழிலில் ஈடுபடலாமா என்றும், சொந்த தொழில் செய்பவர்களுக்கு உத்தியோகத்துக்கு மாறலாமா என்ற எண்ணமும் ஏற்படும் காலகட்டம் இது. பிறரது சங்கடங்களுக்கு ஆறுதல் சொல்லுவதுடன் நிறுத்திக்கொள்வது நல்லது. இல்லாவிட்டால் கையில் உள்ள காசையும் இழக்கும் சூழல் ஏற்படும்.

## மீனம்

பிரயாணங்களால் மனதில் நிம்மதியும், உற்சாகமும் ஏற்படும். மனதுக்குள் புதிய சிந்தனைகள் ஏற்படும். உறவினர்கள், நண்பர்களிடம் பேசும்போது கவனமாக அளவாக பேசுங்கள். இல்லாவிட்டால் உங்கள் கருத்துகள் தவறாக புரிந்து கொள்ளப்படும்.


புதிய இறைவழிபாடுகளை மேற்கொண்டு சிக்கல்களை தீர்க்க முயற்சிப்பீர்கள். அரசு பணியில் உள்ளவர்களுக்கு ஆதாயம் தரும் வாரம். அலைச்சல்களுக்கு பின்னரே கேட்ட இடத்திலிருந்து பொருளாதார உதவி கிடைக்கும்.

ஒரு சிலருக்கு எதிர்மறை எண்ணங்களால் மனதில் ஒருவித பயம் ஏற்படும். எந்தவொரு விடயத்திலும் பலமுறை சிந்தித்த பின்னரே இறங்க வேண்டும். பணி புரியும் பெண்கள் அலுவலக பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி ஈடுபட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## விண்வெளி உபகரணங்கள் ஏற்றுமதிக்கு சீனா தடை



(பீஜிங்)

தாய்வானுக்கு ஆயுதங்களை விற்ற சில அமெரிக்க நிறுவனங்களுக்கு சீனா பொருளாதார தடை விதித்துள்ளது.

விண்வெளிக்கு செயற்கைக்கோள்களை அனுப்புவதில் உலக நாடுகளிடையே கடும் போட்டி நிலவுகிறது. இதில் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் முன்னணியில் உள்ளன.

இந்தநிலையில் விமானம், விண்வெளி உபகரணங்கள், கட்டமைப்பு பாகங்கள், மென்பொருள் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றை ஏற்றுமதி செய்ய சீனா கட்டுப்பாடுகளை விதிக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து சீன வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தேசிய பாதுகாப்பு மற்றும் அணு ஆயுத பரவல் தடை போன்றவற்றிற்காக இந்த தடை விதிக்கப்பட்டு இருப்பதாக கூறப்பட்டு உள்ளது.

அதேபோல் தாய்வானுக்கு ஆயுதங்களை விற்ற சில அமெரிக்க நிறுவனங்களுக்கும் சீனா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. (நி)

## ரஃபாவில் இருந்து வெளியே

## மீண்டும் போர் நிறுத்



(ஜெருசலேம்)—

போர் நிறுத்தத்தி

நெதன்யாகு

விடுத்துள்ளார்.

ரஃபாவில் கடந்த 3 வாரங்களாக தாக்குதல் நடத்திய இஸ்ரேல் தற்போது தனது படைகளை அங்கிருந்து வெளியேற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல்

பன யில் ருந் யிழு பார் ஊட டுள் ஜப இர உய அ வீடு உ மன கப

## அதிநவீன போர் விமானங்களை இந்திய எல்லையில் குவிக்கும் சீனா

### செயற்கைக்கோள் படங்களால் மீண்டும் பதற்றம்



(டில்லி)

இந்திய எல்லையை ஒட்டி சீனா தனது அதிநவீன போர் விமானங்களை அணிவகுத்திருக்கும் செயற்கைக்கோள் படங்கள், இந்தியா - சீனா எல்லையில் மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளன.

அண்மையில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்கள், சிக்கிம் மாநிலத்தின் இந்திய எல்லையில் இருந்து சுமார் 100 கி.மீ தொலைவில் அமைந்துள்ள உயரமான திபெத்திய விமான தளத்தில் ஏராளமான ஜே-20 போர் விமானங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. சீனாவின் விமானப்படையில் மிகவும் மேம்பட்ட போர் விமானங்கள் இவையாகும். செயற்கைக்கோள் தரவில் பகிரப்பட்டிருக்கும் படங்கள், ஷிகாட்சே இரட்டைப் பயன்பாட்டு விமான நிலையத்தில் ஆறு ஜே-20 போர் விமானங்களைக் காட்டுகின்றன. சுமார் 12,500 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த விமான நிலையம் உலகின் மிக உயரமான விமான தளங்களில் ஒன்றாகும்.

ஒரே நாளில் சேகரிக்கப்பட்ட பல செயற்கைக்கோள் படங்கள், இந்த ஜே-20 விமானங்கள் மே 27 அன்று விமானத்தளத்திற்கு வந்து சேர்ந்ததைக் குறிக்கிறது. இந்த ஜே-20 விமானங்கள் நிரந்தரமாக ஷிகாட்சேவில் உள்ளதன் பின்னணி சர்வதேச அளவில் கவனம் ஈர்த்துள்ளது. குறிப்பாக இந்திய எல்லைக்கு அருகில் அவை நிறுத்தப்படுவதும், அந்த விமானங்கள் பழகுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதும் அரிதான நிகழ்வாக தெரிய வந்துள்ளது. ஜே-20 போன்ற போர் விமானங்கள் திபெத்தில் நிலைநிறுத்தப்படுவதில் இது முதல் முறை அல்ல என்ற போதும் வணிக ரீதியாகக் கிடைக்கும் செயற்கைக்கோள் படங்களின் மூலம் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதில் முன்னெப்போதையும் விட மிகப்பெரியதாக சீனாவின் முன்னேற்பாடு அடையாளம் காணப்பட்டுள்ளது.

சீனாவின் இந்தப் போர் விமானங்கள் தாணப்பட்ட திபெத்தின் ஷிகாட்சே, வங்காளத்தில் உள்ள ஹசிமாராவில் உள்ள இந்திய விமானப்படையின் தளத்திலிருந்து 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. அங்கு இந்தியா 16 ரஃபேல்களின் இரண்டாவது படைப் பிரிவைத் தளமாகக் கொண்டுள்ளது. இந்திய விமானப் படையின் உச்சமாக அலங்கரித்திருக்கும் இந்த ரஃபேல்களுக்குப் போட்டியாக, சீனாவின் நகர்வாகவும் ஷிகாட்சேவில் ஜே-20 விமானங்கள் இருப்பை கணிப்பவர்கள் உண்டு.

ஆனால் கடந்த ஆண்டுகளில் அருணாச்சல பிரதேசம் மாநிலத்தின் பெரும் பரப்பை ஆக்கிரமித்து மாதிரி கிராமங்களை அமைத்து வருவது, இந்திய எல்லைகளை ஒட்டி ராணுவ துருப்புகள் நடமாட்டத்துக்கான சாலைகள், பாலங்களை அமைப்பது என சீனாவின் நகர்வுகள் எல்லையின் பதற்றத்தை கூட்டும் வகையிலேயே அமைந்துள்ளது.

அத்துடன் தற்போதைய ஜே-20 போர் விமானங்களை சீனா அதிகரித்து வருவது இந்த பதற்றத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு சென்றுள்ளது. (நி)

## மிச்செல் ஒபாமா மரியன் ரொபின்சன்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் முதல் பெண்மணி மிச்செல் ஒபாமாவின் தாயார் மரியன் ரொபின்சன் 86 வயதில் காலமானார்.

மரியன் ரொபின்சன் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

தனது தாயின் இறப்பு செய்தி குறித்து மிச்செல் ஒபாமா எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எங்கள் முழு குடும்பத்திற்கும் அவர் உறுதுணையாக இருந்தார். இன்று அவர் உயிரிழந்து விட்டார் என்பதை பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மனம் உடைந்துள்ளோம்" என தெரிவித்

துள் தாய மரி இரு டுள் ஏடு பத்த ஆக முக ளா குப் ப்டே மற் கிலே மற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...யேறும் இஸ்ரேலியப் படைகள்

## ...த்தத்திற்கு அழைப்பு

### ...த்திற்கு இஸ்ரேலிய பிரதமர் மீண்டும் அழைப்பு

படைகள் வெளியேறிவரும் நிலையில் அகதிகள் முகாமில் தங்கியிருந்த பொதுமக்கள் தங்களது குடியிருப்புப் பகுதிகளைச் சென்று பார்வையிட்டு வருவதாக சர்வதேச ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், காசாவின் ஜபாலியா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 70 பேரின் உடல்கள் அங்கு காணப்பட்டதாகவும், பல வீடுகள் இடிந்து தரைமட்டமாகி உள்ளதுடன் மேலும் பலர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹமாஸ் படைகள் முற்றாக அழிக்கப்படும் வரை காசாவில் தமது இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், மீண்டும் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில் இஸ்ரேலியப் பிரதமர் தனது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், உடனடிப் போர் நிறுத்தத்துக்கு கனடா அழைப்பு விடுப்பதாக அந்நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் உடனடிப் போர் நிறுத்தம், தடையில்லா மனிதாபிமான உதவிகளை அவசரமாக அதிகரிப்பது மற்றும் பணயக் கைதிகள் அனைவரையும் விடுவிப்பதற்கு கனடா அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த துயரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு ஒரு வாய்ப்பாகும் என்றும் இதனைக் கருத்திற்கொண்டு அமைதிக்கான பாதைக்கு திரும்ப வேண்டும் என கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது பதிவில் தெரிவித்துள்ளார். (நி)

## ஆப்கானிஸ்தானில் படகு கவிழ்ந்து விபத்து

### 20 பேர் உயிரிழப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் நங்கர்ஹார் மாகாணத்திலுள்ள ஆற்றில் படகொன்று கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்தனர்.


உயிரிழந்தவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் அடங்குவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு ஆண், ஒரு பெண், 2 சிறுவர்கள் உட்பட 5 உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.குறித்த படகில் 26 பேர் பயணித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் விபத்திற்கான காரணம் இதுவரையில் தெரியவராத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி)

## ...மாவின் தயார் ...ன்சன் காலமானார்



...துள்ளார்.

பாராக் ஒபாமா மனைவியின் தாயாரின் உயிரிழப்பு குறித்து, ஒரு மரியன் ரொபின்சன் மட்டுமே இருந்தார் இருப்பார் என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் சிக்காகோவில் ஏழு பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் இவரும் ஒருவராக 1937 ஆம் ஆண்டு பிறந்துள்ளார்.

செயலாளராக பணிபுரிவதற்கு முன்பு ஆசிரியராக பணிபுரிந்துள்ளார். அவர் சிக்காகோவின் தெற்குப் பகுதியில் தனது கணவர் ப்ரேசியர் ரொபின்சனுடன் மிச்செல் மற்றும் அவரது மற்றைய பிள்ளை கிரேக் ஆகியோருடன் வாழ்ந்துள்ளார். (நி-6)

## சுனிதாவின் விண்வெளி பயணம் மீண்டும் ஒத்திவைப்பு



(வோஷிங்டன்)

இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்சின் விண்வெளி பயணம் மீண்டும் ஒத்தி வைக்கப்படுவதாக நாசா அறிவித்தது.

இந்தியாவை பூர்வீகமாக உடைய சுனிதா வில்லியம்ஸ், (வயது 58) இவர் ஏற்கனவே இரு முறை விண்வெளி சென்று திரும்பியுள்ளார்.

இந்நிலையில் "போயிங்" நிறுவனம் தயாரித்துள்ள "ஸ்டார்லைனர்" என்ற விண்கலம் கடந்த மே 07 ஆம் திகதி சர்வதேச விண்வெளிக்கு புறப்படுவதாக இருந்தது. ஆனால், ஏவப்படுவதற்கு, 90 நிமிடங்களுக்கு முன், தொழில்நுட்ப பிரச்சினையால், இந்த பயணம் திடீரென நிறுத்தப்பட்டதாக நாசா அறிவித்தது.

இந்நிலையில் மீண்டும் ஜூன் 01 ஆம் திகதி புறப்படுவதற்கு எல்லா ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் கடைசி விநாடியில் ஒத்தி வைக்கப்பட்டது. இதன் மூலம் மூன்றாவது முறையாக விண்வெளிக்கு மேற்கொள்ளவிருந்த சாதனை பயணம் தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக கடைசி நேரத்தில் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. (நி-6)

## நீச்சல் அடித்து ஆற்றைக் கடந்த சிங்கங்கள்

### வைரலாகும் வீடியோ

(கென்யா)

சமூக வலைத்தளங்களில் வன விலங்குகள் தொடர்பாக ஏராளமான வீடியோக்கள் வெளிவந்தாலும் அவற்றில் சில வீடியோக்கள் மட்டுமே பயநர்களை இரசிக்க செய்யும். அந்த வகையில் யூ-டியூபில் "லேட்டஸ்ட் சைட்டிங்ஸ்" என்ற பக்கத்தில் வெளியிடப்பட்ட ஒரு வீடியோவில், சிங்கங்கள் நீச்சல் அடித்து ஆற்றை கடந்த காட்சிகள் பயநர்களை கவர்ந்துள்ளது. அந்த வீடியோ கென்யாவில் உள்ள மசாய் மாறா தேசிய சரணாலயத்தில் எடுக்கப்பட்டுள்ளது. அங்கு வன பகுதிக்குள் ஒரு ஆறு கடந்து செல்கிறது. வனப்பகுதியில் 3 சிங்கங்கள் நடந்து வரும் காட்சிகளுடன் வீடியோ தொடங்குகிறது. அப்போது ஆற்றின் ஒரு கரையில் இருந்து மற்றொரு கரைக்கு செல்வதற்காக சிங்கங்கள் வரிசையாக வருகின்றன. பின்னர் ஆற்றில் குதித்து சிங்கங்கள் நீச்சல் அடித்தவாறு மற்றொரு கரையை கடந்து செல்லும் காட்சிகள் வீடியோவில் உள்ளன.

இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி பயநர்களின் பார்வைகளை குவித்து வருகிறது. (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெண்தாமரை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name - Nelumbo nucifera**
**Family - Nymphaeceae**

இது ஓர் நீர்த்தாவரம் ஆகும். பொதுவாக குளங்களில் செழித்து வளரும். இப்பூக்களின் நிற வேற்றுமையைக் கொண்டு வெண்மை, செம்மை, நீலம், மஞ்சள் என நான்கு இனங்கள் உண்டு. ஆனாலும் வெண்தாமரை பூக்கள் மருத்துவ குணங்கள் மிகுந்தவை. இதனுடைய பூ இதழ்கள், விதைகள், கிழங்குகள் அனைத்தும் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை. இதயத்தை வன்மைப்படுத்தக் கூடியவை.

இதில் உயிர்ச்சத்து C ,B, சோடியம், நார்ச்சத்து, போலிக் கமிலம், மங்கனீஸ் சத்துக்கள் உண்டு. இருதயம் பலம் பெறவும், இரத்த அமுத்தத்தை சீராக பேணுவதற்கும் ஒரு வெண்தாமரைப் பூவை எடுத்து இதழ்களை பிரித்து எடுத்து, 10 மிளகு, 1 ஏலக்காய் தட்டிப் போட்டு ஒரு மண் சட்டியில் 200 மில்லி நீர்விட்டு அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து 100 மில்லியாக வற்றவைத்து வடிகட்டி இளஞ்சூடாக 10 மில்லி தேனும் கலந்து தினமும் காலை, மாலை 40 நாட்கள் அருந்தி வரவும். இருதயம் பலப்படுவதோடு, இரத்த ஓட்டமும் சீராகும்.


உயர் இரத்த அமுத்தத்தையும் குறைக்கக் கூடியதாக இருக்கும். தாமரையின் வேரில் நிறைய நார்ச்சத்தும் காபோவைதரேற்றும் உண்டு. நல்ல செரிமானத்தைக் கொடுக்கின்றது. அதே வேளை அதிகரித்த கொலஸ்ரோலையும், அதியுயர் குருதியமுத்தத்தையும் ஒழுங்காக்கின்றது. இதன் விதைகளில் எதிர் ஒட்சியேற்றத்தன்மையும், தாபமகற்றி (Antiinflammatory) செயற்பாடும் இருப்பதால் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கின்றது. அதே வேளை புற்று நோய்க்கலங்களை பெருக்கும் வேகத்தை தடுக்கும் ஆற்றலும் உண்டு. அத்துடன் மூட்டுக்களில் ஏற்படும் வீக்கத்தையும் தணிக்கக் கூடியது.


தாமரைக்கிழங்கில் அதிகம் உயிர்ச்சத்துக்கள், கனிமங்கள், உயிர்ச்சத்து Cயும் அதிகளவு உண்டு. இது மூலரோகம் அதியுயர் குருதியமுக்கத்தை சீராக்கும். தாமரைக்கிழங்கு அதிகளவில் உணவில் சேர்க்கப்படுகிறது. மேலும் வெண்தாமரைப்பூவின் இதழ்களை கைகளால் நன்கு கசக்கி முகப்பருக்கள் மீது தடவிவர முகப்பருக்கள் நீங்கும். முகம் பளபளப்பாகவும் இருக்கும்.

வெண்தாமரைப் பூ இதழ்களை நிழலில் உலர்த்தி பொடியாக்கி பனை வெல்லத்தை நீரில் கரைத்து வடித்து பொடியைச் சேர்த்து பாகுபோல் காய்ச்சி 1-2 மேசைக்கரண்டி அளவு எடுத்துவர இருமல், அதிக இரத்தப் போக்கு ( மாதவிடாய் காலத்தில் ) போன்றவற்றிக்கு சிறந்த பலனைக் கொடுக்கும்.

வெண்தாமரைப் பூ மூளை வளர்ச்சிக்கு உதவுகின்றது. ஞாபக சக்தியைத் துாண்டுகிறது. நரம்புகளுக்கு பலம் கொடுக்கின்றது. வெண்தாமரைப்பூவின் மகரந்தப் பொடியுடன் 1/2 தேக்கரண்டி அளவு எடுத்து தேன் சேர்த்து காலை, மாலை சாப்பிட்டு வர கண்பார்வை தெளிவாகும்.

ஈரலில் கொழுப்பு படிவதை தடுப்பதற்கும் நீக்குவதற்கும் வெண்தாமரைப் பூவின் இதழ்களைச் சேகரித்து பொடித்து வைத்துக் கொண்டு 4 கிராம் அளவு காலை, மாலை இளஞ்சூட்டு நீருடன் எடுத்து வரலாம். உடற்சூட்டைத் தணிக்கவும், தாகத்தை தணிக்கவும், குழந்தைகளுக்கு இருதயத்தை பலப்படுத்தவும் உலர்ந்த வெண்தாமரை இதழ்களை பொடித்து 5 தேக்கரண்டி அளவு எடுத்து 300 மில்லி நீரில் சேர்த்து அடுப்பேற்றி காய்ச்சி 150 மில்லி ஆக வற்றவைத்து பசும்பால், பனைவெல்லம் சேர்த்து எடுத்து வர மேற்படி பயனைக் கொடுக்கும்.







தாமரை விதைகளை மக்கானா என அழைப்பார். ஆனாலும் மக்கானா வேறு நீர்த்தாவரத்தின் விதைகளாகும். எனவே மக்கானா தாவரமானது lotus seed அல்ல. இதனை Fox Nuts எனக் குறிப்பிடுவர். இதன் தாவரவியற் பெயரானது Euriyale Feroa எனப்படும்.

Prickly Water Lilly என அழைக்கப்படுகிறது. இதுவும் குளங்களில் வளரும். கடைகளில் இதுவும் தாமரை விதைகள் என்று விற்கப்படுகின்றது. இரண்டும் வெவ்வேறு. ஆனாலும் சாப்பிடக்கூடியது. மாச்சத்து குறைவாகவும், நார்சத்து அதிகமாகவும் உள் ளது. எனவே இரண்டு விதைகளும் வேறு, வேறு தாவரங்களின் விதை களாகும்.

தாமரை விதைகளை வறுத்து பருப்பு எடுத்தும் சாப்பிடலாம். தோலில் சுருக்கம் ஏற்படுவதையும் தடுக்கக் கூடியது. நார்ச்சத்து, புரதச்சத்து என்பன அதிகளவில் காணப்படும். இதன் விதைகளை பொடித்து 1-2 கிராம் அளவு சாப்பிட்டு வர உடலிற்கு வன்மையைக் கொடுக்கும்.

---

# இன்று ஒரு தகவல் 143



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஏழையின் உருவில் இறைவன்

ஆன்மிகப் பெரியவர் ஒருவர் நீண்ட நாட்களுக்கு முன்னர் திருநெல்வேலி மாவட்டத்திலே அவர் ஒரு சுற்றுப் பயணம் போய்க் கொண்டு இருந்தார்.

பல்லக்கு பின்னால் போகும். ஆனால் அவர் நடந்து தான் போவார்.

ஒரு நாள் மாலை, நேரம் 4மணி இருக்கும். அந்தப் பெரியவர் ஒரு தெரு வழியாக போய்க்கொண்டு இருந்தார். வழியிலே ஏகப்பட்ட அடியார்கள் அவரிடம் வந்து வணங்கி ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு போனார்கள்.

பல சின்னக் குழந்தைகளும் பாட்டுப் பாடிக் கொண்டே அங்கே நின்று கொண்டு இருந்தார்கள். பெரியவர் அந்தக் குழந்தைகளைப் பார்த்தார். எல்லாம் ஏழைக் குழந்தைகள்.

அவர்கள் போட்டிருந்த சட்டையெல்லாம் மிகவும் அழுக்காக இருந்தது! கிழிந்து இருந்தது! இன்னும் சில குழந்தைகளுக்கு ஆடையே இல்லை. பார்ப்பதற்கும் மிகவும் பாவமாக இருந்தது.

பெரியவர் இந்தப் பிள்ளைகளைப் பார்த்தார். அவருடைய கருணை உள்ளம் உருக ஆரம்பித்து விட்டது. நடந்து போய்க்கொண்டிருந்த அவர் மேற்கொண்டு போகாமல் அங்கேயே நின்று விட்டார். அவர் அந்த இடத்திலேயே நின்றவுடனேயே அவரு டைய காரியஸ்தருக்கு மிகவும் கவலை ஏற்பட்டு விட்டது.

ஏன் என்றால் பெரியவர் ஒரு முக்கிய காரியத்திற்காக சீக்கிரமாக அடுத்த ஊருக்குப் போய்ச் சேர வேண்டும். அந்தக் கவலை காரியஸ்தருக்கு... அதனாலே கிடுகிடு வென்று பெரியவரிடம் ஓடினார். அடுத்த ஊருக்கு போக வேண்டிய அவசரநிலையை ஞாபகப்படுத்துவதற்காக, மிகவும் பணிவாக ஆரம்பித்தார்.

ஆனால் அதற்கு முன்பு பெரியவரே இவரைத் தன்னிடம் அழைத்து காதோடு காதாக ஏதோ சொன்னார். இதைக் கேட்டவுடனே காரியஸ்தர் மிகவும் வேகமாக அங்கே இருந்து எங்கேயோ ஓடினார். அவர் போன பின்பு பெரியவர் மறுபடியும் அந்தக் குழந்தைகளைப் பாடச் சொல்லி மிகவும் பிரியமாக அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

நீண்ட நேரம் ஆகிவிட்டது. மணி ஆறு இருக்கும். காரியஸ்தர் நிறைய மூட்டைகளை அள்ளிக் கொண்டு வந்து சேர்ந்தார். அதையெல்லாம் பிரித்தார். எல்லாம் குழந்தைகள் போட்டுக் கொள்வதற்கான சட்டைகள், துணிமணிகள். காரியஸ்தர் மிகவும் கெட்டிக்காரர்.

பெரியவர்கள் குறிப்பறிந்து ஓடுகிற அவசரத்திலேயும் அங்கே எத்தனை குழந்தைகள் இருக்கின்றனர். ஆண் குழந்தைகள் எத்தனை? பெண் குழந்தைகள் எத்தனை? யார் யாருக்கு என்னென்ன வயது இருக்கும்? எல்லாத்தையும் கவனமாக பார்த்துக் கொண்டு போய் அவர்களுக்குத் தகுந்த மாதிரி ரெடிமேட் ஆடைகள் வாங்கிக் கொண்டு வந்து விட்டார்.

பெரியவர் அந்தக் குழந்தைகள் எல்லோரையும் அருகிலே கூப்பிட்டார். ஆசீர்வாதம் செய்தார். தன் கையாலேயே அத்தனை குழந்தைகளுக்கும் அந்த ஆடைகளை எடுத்துக் கொடுத்தார்.

அந்தப் பிள்ளைகளுக்கு எல்லாம் மிகவும் சந்தோஷம். சட்டைகளை எல்லாம் வாங்கி மிகவும் உற்சாகமாக போட்டுக் கொள்ள ஆரம்பித்தார்கள். ஆனால் அந்தப் பெரியவருடன் வந்தவர்கள் எல்லோரும் தவித்துக் கொண்டு இருந்தார்கள்.

பக்கத்து ஊருக்கு போய் பெரியவர் பூசை ஒன்று செய்ய வேண்டி இருக்கிறது. கால மோ அதிகமாக கடந்து போய்விட்டது .என்ன செய்வது?

காரியஸ்தர் மறுபடியும் மிகவும் பயபக்தியோட பெரியவரை நெருங்கினார். வேகமாக புறப்பட வேண்டும் பக்கத்து ஊரிலே பூசை இருக்கு என்றார். அதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா?

பூசையா? அது தான் இங்கேயே ஆகிவிட்டதே? அந்த ஏழைக் குழந்தைகளுக்கு ஆடைகள் கொடுத்தோமே! அதுதான் பூசை! இது போதும் என்றார்.ஏழைகளின் உருவிலே இறைவனைப் பார்க்க வேண்டும் என்று சொல்லுகின்றோம் அல்லவா அதற்கு இது தான் உதாரணம். இதை சரியாக புரிந்து கொள்ளாத சிலபேர் தான் இறைவனையே பார்த்து விடுகிறார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமபுரம் மருத்துவமனைக்கு அமைச்சர் விஜயம்

## தேவைகள் குறித்து ஆராய்வு



(கண்டாவளை)

கிளிநொச்சி தருமபுரம் பிரதேச மருத்துவமனை மற்றும் போதைப் பொருள் புனர்வாழ்வு நிலையம் என்ப வற்றிற்கு கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவருமான டக்ளஸ் தேவா னந்தா விஜயம் மேற்கொண்டு அதன் தேவைகள் குறித்து கலந்துரையாடி உள்ளார்.

கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா பகல் 9 மணிக்கு தருமபுரத்தில் அமைந்துள்ள போதைப்பொருள் சிகிச்சை புணர்வாழ்வு நிலையத்துக்கு சென்று அதன் தேவைகள் குறித்தும் கலந்துரையாடியதைத் தொடர்ந்து தருமபுரம் மருத்துவமனைக்கு சென்று மருத்துவமனை நிலைமைகளை பார்வையிட்டு தேவை கள் தொடர் பாகவும் கலந்துரையாடி உள்ளார்.

போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையம் மற்றும் மருத்துவமனை ஆகியவற்றில் உடனடியாக செய்ய வேண்டிய வேலைகள் தொடர்பில் தன்னுடைய கட்சி நிதியிலிருந்து அவற்றில் குறிப்பிட்ட சில தேவைகளை நிவர்த்தி செய்து தருவதாக உறுதிய ளித்துள்ளார்.

குறித்த சந்திப்பில் போதைப்பொருள் புணர்வாழ்வு நிலையத்தின் வைத்தி யர்கள் மற்றும் ஊழியர்கள் தருமபுரம் மருத்துவமனை பொறுப்பு வைத்திய அதிகாரி மற்றும் மருத்துவமனை உத் தியோகத்தர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதி கள் நோயாளர் நலன்புரி சங்க நிர்வாகத்தினர் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். 6-315-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 550 | 400 | 300 | 350-420 | 450 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 200 | 120 | 180 | 250 |
| தக்காளி | 180 | 250 | 200 | 150 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 140 | 150 | 120 | 200 |
| கோவா | 300 | 220 | 200 | 200 | 250 |
| கரட் | 250 | 280 | 350 | 250 | 300 |
| பூசணி | 100 | 100 | 120 | 100 | 100 |
| புடோல் | 140 | 180 | 200 | 120 | 300 |
| வாழைக்காய் | 100 | 130 | 100 | 80 | 160 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 250 | 250-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 230 | 250 | 250 |
| பாகற்காய் | 800 | 800 | 600 | 700 | 800 |
| வெண்டக்காய் | 150 | 250 | 200 | 220 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 60 | 200-250 | 200 |
| லீக்ஸ் | 500 | 450 | 300 | 300 | 480 |
| பீற்றூட் | 450 | 400 | 600 | 300 | 500 |
| கறிமிளகாய் | 550 | 600 | 400 | 250 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 600 | 400-700 | 800 |
| போஞ்சி | 800 | 900 | 600 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 500 | 300 | 300 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 100 | 120-140 | 120 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1000 | 800-1000 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 600 | 450 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 180 | 300 | 200 | 80 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 300 | 100 | 90 | 50 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 90 | 80 |
| ஈரப்பலா | 150 | 160 | 120 | 100 | -- |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3134

ருத்திரன்




றோஜினி




கஜீவன்




நயன்




சாலினி




பிரசாந்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். இவை உங்கள் பெயருடன் ... பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 497





பூங்குழலியின் உள்ளத்தில் குதூகலமும் பொங்கியது. அவள் படகிலே வழக்கமாகப் பாடும் பழைய கீதம் தானாகவே புதிய உருவம் கொண்டது. அலைகளின் இரைச்சலை அடக்கிக் கொண்டு அந்தக் கீதம் அவளுடைய கம்பீரமான இனிய குரல் வழியாக வெளிவந்து நாற்றிசையும் பரவியது.

அலைகடல் கொந்தளிக்கையிலே அகக் கடல் தான் களிப்பதுமேன்? நில மகளும் துடிக்கையிலே நெஞ்சகந்தான் துள்ளுவதேன்? இடி இடித்து எண் திசையும் வெடிபடும் அவ்வேளையிலே நடனக் கலைவல்லவர் போல் நாட்டியந்தான் ஆடுவதேன் பாய்மரக் கட்டையைப் பிடித்துக் கொண்ட இளவரசரும், வந்தியத்தேவனும் அலைகடலில் மொத்துண்டு மொத்துண்டு மிதந்து கொண்டிருந்தார்கள். அன்று ஓர் இரவு தான் அவர்கள் அவ்வாறு கடலில் மிதந்தார்கள். ஆனால் வந்தியத்தேவனுக்கு அது எத்தனையோ யுகங்கள் எனத் தோன்றியது. அவன் சீக்கிரத்திலேயே நிராசை அடைந்து விட்டான் பிழைத்துக் கரையேறுவோம் என்ற நம்பிக்கையை அடியோடு இழந்து விட்டான்.

ஒவ்வொரு தடவை அலை உச்சிக்கு அவன் போய்க் கீழே வந்த போதும், "இத்துடன் செத்தேன்" என்று எண்ணிக் கொண்டான். மறுபடியும் உயிரும் உணர்வும் இருப்பதைக் கண்டு வியந்தான்.

அடிக்கடி இளவரசரைப் பார்த்து, "என்னுடைய அவசர புத்தியினால் தங்களையும் இந்த ஆபத்துக்கு உள்ளாக்கினேனே" என்று புலம்பினான்.

இளவரசர் அவனுக்கு ஆறுதல் கூறித் தைரியம் ஊட்டி வந்தார். "மூன்று நாள், நாலு நாள் வரையில் கடலில் இம்மாதிரி மிதந்து பிழைத்து வந்தவர்கள் உண்டு" என்று அடிக்கடி சொல்லி வந்தார்.

"நாம் கடலில் விழுந்து எத்தனை நாள் ஆயின?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

இன்னும் ஒரு ராத்திரி கூட ஆகவில்லையே?" என்றார் இளவரசர்.

"பொய்! பொய்! பல நாட்கள் ஆகியிருக்க வேண்டும்" என்றான் வந்தியத்தேவன்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவனுக்கு இன்னொரு கஷ்டம் ஏற்பட்டது. தொண்டை வறண்டுபோய்த் தாகம் எடுத்தது. தண்ணீரிலேயே மிதந்து கொண்டிருந்தான் ஆனால் தாகத்துக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை. இது பெரிய சித்திரவதையாயிருந்தது. இளவரசரிடம் கூறினான்.

"கொஞ்சம் பொறுமையாயிரு! சீக்கிரம் பொழுது விடியும்! எங்கேயாவது கரையிலே போய் ஒதுங்குவோம்" என்றார் இளவரசர்.

சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தான் முடியவில்லை. "ஐயா! என்னால் இந்தச் சித்திரவதையைப் பொறுக்க முடியாது. கட்டை அவிழ்த்து விடுங்கள்! கடலில் முழுகிச் சாகிறேன்!" என்றான்.

இளவரசர் மீண்டும் தைரியம் கூற முயன்றார் ஆனால் பலிக்கவில்லை. வந்தியத்தேவனுக்கு வெறி மூண்டது. தன்னுடைய கட்டுகளைத்தானே அவிழ்த்துக் கொள்ள முயன்றான். இளவரசர் அதைப் பார்த்தார். அருகில் நெருங்கிச் சென்று அவனுடைய தலையில் ஓங்கி இரண்டு அறை அறைத்தார். வந்தியத்தேவன் உணர்வை இழந்தான்!

அவன் மறுபடி உணர்வு பெற்றபோது பொழுது விடிந்து வெளிச்சமாயிருப்பதைக் கண்டான். அலைகளின் ஆரவாரமும் சிறிது அடங்கியிருந்தது. சூரியன் எங்கேயோ உதயமாகியிருக்க வேண்டும்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## முட்டாளை மணந்த இளவரசி

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவள் மிகுந்த அறிவுடையவளாக விளங்கினாள். யார் பேசினாலும் தன் அறிவுக் கூர்மையால் அவர்களை மடக்கி விடுவாள் அவள்.



இளவரசி திருமணப்பருவம் அடைந்தாள். தன் மகளுக்கு யாரைத் திருமணம் செய்து வைப்பது என்று சிந்தித்தான் அரசன்.

தந்தையே! இளவரசனாக இருந்தாலும் சரி, ஏழைப் பிச்சைக்காரனாக இருந்தாலும் சரி. பேச்சாற்றலில் யார் என்னை வெற்றி கொள்கின்றாரோ அவரையே மணப்பேன் என்றாள் அவள்.

இந்தச் செய்தி பல நாடுகளுக்கும் தெரிவிக்கப்பட்டது.

பல நாட்டு இளவரசர்களும் அறிஞர்களும் போட்டியில் கலந்து கொள்ள அரண்மனைக்கு வந்தனர்.

வந்த ஒவ்வொருவரையும், சிறிது நேரத்திற்குள் தோற்கடித்து வெளியே அனுப்பிக் கொண்டிருந்தாள் இளவரசி.

நாள் தோறும் ஏராளமான கூட்டம் அரண்மனைக்கு வந்த வண்ணம் இருந்தது. இப்படியே சென்றால் நாட்டில் உள்ள எல்லோருடனும் இளவரசி பேச வேண்டி இருக்கும்.

வருகின்ற கூட்டத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது? பொழுது போக்குவதற்காக இங்கு வருபவர்களை எப்படித் தடை செய்வது என்று குழம்பினான் அரசன்.

போட்டியில் வென்றால் திருமணம், தோற்றால் நூறு கசையடி, என்று நாடெங்கும் முரசறைந்து தெரிவிக்கச் சொன்னான் அவன்.

இதனால் இளவரசியுடன் போட்டியிட வருகின்றவர் எண்ணிக்கை மிகவும் குறைந்தது. வந்தவர்களும் தோற்றுக் கசையடி வாங்கிக் கொண்டு சென்றனர்.

அந்த நாட்டில் பிச்சைக்கார இளைஞன் ஒருவன் இருந்தான். இளவரசியை மணப்பதற்காக நிகழும் போட்டியைப் பற்றி அறிந்தான் அவன்.

முயற்சி செய்து பார்ப்போம். நல்ல வாய்ப்பு இருந்தால் இளவரசியை மணப்போம். இல்லையேல் கசையடி வாங்கி இறந்து விடுவோம் என்று நினைத்தான் அவன்.

தன் ஊரில் இருந்து தலை நகரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான் அவன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாக்குறுதி கொடுப்பவன் அதற்குக் கடனாளி ஆகிறான்.
- தலமூத்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சமாளிக்கின்ற அணுகுமுறையே ஆட்சியாளர்களிடம் உள்ளது

இலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போவதில்லை என்பது சர்வ நிச்சயம்.

இனப் பிரச்சினை உண்டு. அதனைத் தீர்த்து வைக்க வேண்டும். அதற்குத் தமிழ் அரசியல் தரப்புகள் ஒத்துழைக்க வேண்டுமென்றெல்லாம் ஆட்சியாளர்கள் பேசுவார்கள்.

கூடவே இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதுபோல பாசாங்கு செய்வர். நாமும் அதனை நம்புவோம். ஆனால் இறுதியில் அவர்கள் அம்போ என்று எங்களைக் கைவிட்டுவிடுவர்.

மீண்டும் தேர்தல் நடக்கும். யாரோ ஒருவரை நாம் நம்புவோம். அவர் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என்று மீண்டும் தொடங்கும் மிடுக்குப் போல எங்களிடமும் நம்பிக்கை கருக்கட்டும்.

அந்த நம்பிக்கை, கருவல்ல. நோய்க்கட்டி என்பதை உணர்ந்து கொள்வதற்கு மீளவும் ஐந்து ஆண்டுகள் எடுக்கும். இதுதான் எங்களின் நிலைமை.

இவ்வாறாக, தமிழ்த் தரப்புகளைச் சமாளிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் காலம் கடத்துவதே இலங்கை ஆட்சியாளர்களின் சூக்குமம்.

இவ்வாறு தமிழ்த் தரப்புகளைச் சமாளிப்பதன் மூலம் காலம் கடத்துகின்ற நுட்பத்தை ஆட்சியாளர்கள் பின்பற்றுவதற்கு வழி வகுத்தவர்கள் நம் தமிழ் அரசியல் தலைவர்கள் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

உண்மை. இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என ஆட்சித் தரப்பில் இருந்த ஒருவர் உண்மையாக நினைத்தாரென்றால், அவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்பதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

எனினும் அவரின் முயற்சிகள் தோல்வியில் முடிந்து போயின. ஆயினும் அவரின் முயற்சி தொடர்ந்து நடைபெறாமல் அதைத் தடுத்து அவரிடம் இருந்து அரசியல் இலாபம் ஈட்டுவதற்கு நம் தமிழ் அரசியல் தலைவர்கள் முற்பட்டனர். இதனால் விடுதலைப் போராட்டம் வேறு, தமிழ் அரசியல்வாதிகளின் நோக்கம், வேறு என்பதை சந்திரிகா குமாரதுங்க உட்பட சிங்கள அரசியல் தலைவர்கள் நன்கு உணர்ந்து கொண்டனர்.

இங்குதான் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்காமல், சமாளிப்பதன் மூலம் காலம் கடத்துகின்ற உபாயம் சிங்களத் தலைவர்களால் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆம், போருக்குப் பின், இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய கட்டாயச் சூழல் சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஏற்படுகிறது. அதற்கான சர்வதேச அழுத்தம் இறுக்கமாக இருக்கிறது.

இவ்விடத்தில் அன்றைய ஆட்சியாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரை குளிர்மைப்படுத்த, தமிழ் மக்கள் சார்பாக உரத்துக் கதைக்க வேண்டிய இரா.சம்பந்தர் சுருதியை அமைதியாக்க, எங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பம் அள்ளுண்டு போனது.

அன்று நம் தமிழ் அரசியல் விட்ட பெரும் தவறு இன்றுவரை எங்கள் தமிழ்த் தலைவர்களைச் சமாளிக்கின்ற உபாயத்தை சிங்கள ஆட்சியாளர்கள் பின்பற்றி வருகின்றனர்.

ஆக, எங்களைச் சமாளிப்பதுதான் தீர்வு என்பது அவர்களின் நிலைப்பாடாயிற்று.

# அஸ்வெசும இரண்டாம் கட்டம் தவறியவர்கள் விண்ணப்பிக்கலாம்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(எப்பாவளை)

அஸ்வெசும இரண்டாம் கட்ட நிவாரணத்திட்டத்தின் கீழ் அடுத்த மாதம் முதல் 24 இலட்சம் குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

எப்பாவளையில் அமைந்துள்ள லங்கா அரச பொஸ்பேட் நிறுவனத்தின் கண்காணிப்புச் சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை அஸ்வெசும நிவாரணம் கோரி விண்ணப்பிக்க முடியாதவர்களுக்கு இன்னும் வாய்ப்பு இருக்கிறது.

அஸ்வெசும இரண்டாம் கட்ட நிவாரணத் திட்டத்தில் 20 இலட்சம் குடும்பங்கள் காப்புறுதிப் பலன்களைப் பெறுவதற்கு உரிமையுள்ளவர்கள் என்பது விசேட அம்சம் என்றும் அவர் கூறியுள்ளார். (ந-7,10)

# இரண்டு பேருந்துகள் மோதி விபத்து ஒருவர் மரணம்; நால்வர் காயம்

பாணந்துறைப்பேருந்து நிலையத்திற்கு அருகில் நேற்றுக் காலை தனியார் பேருந்தும், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துகுள்ளானது.

இந்த விபத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தின் நடத்துனர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நான்கு பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து பாணந்துறை பேருந்து நிலையத்தை நோக்கி திரும்ப முற்பட்ட போது கொழும்பில் இருந்து பாணந்துறை நோக்கி பயணித்த தனியார் பேருந்துடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தை அடுத்து தனியார் பேருந்தின் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன் அவரைக்கைது செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ந-7,10)

# தண்டவாளத்தில் பேருந்தை ஓட்டிய சாரதி கைது

தண்டவாளத்தில் பேருந்தை செலுத்திச்சென்ற சாரதி ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து எம்பிலிபிட்டிய நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றின் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

புவக்பிட்டிய பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கடும் வாகன நெரிசல் ஏற்பட்டமையினால் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்து செல்லும் நோக்கில் தண்டவாளத்தில் பேருந்தினை சாரதி செலுத்தியுள்ளதாக தெரியவருகிறது.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட சாரதியை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-7.10)

# கடற்தொழிலில் ஈடுபட்டவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

## முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் நேற்று கரைவலைத்தொழிலில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் அவிசாவளைப் பகுதியைச்சேர்ந்த 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான சிவனு சிவகுமார் என்பவராவர்.

குறித்த நபரின் சடலத்தை நேற்று பார்வையிட்ட முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.எச். மஹ்ரூஸ் உடல் கூற்று பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவுகளிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ந-7.10)

## தொடரும் சீரற்ற வானிலை

# ஒன்பது மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு காலி ஹம்பாந்தோட்டை களுத்துறை கண்டி கேகாலை மாத்தறை நுவரெலியா இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஒகேவெல கடுவான பிரதேச செயலக பகுதிகளுக்கு முதற்கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் களுத்துறை மாவட்டத்தின் அகலவத்த தொடாங்கொட ஆகிய பிரதேச செயலக பகுதிகளுக்கும் கண்டி மாவட்டத்தின் கங்கவட்ட கோரலை உடுநுவர யட்டிநுவர இஹல கோரலை பஸ் பாகே கோரலை ஆகிய பிரதேச செயலக பகுதிகளுக்கும்

கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க ருவன்வெல்ல மாவனெல்லை புளத்கொகுபிட்டிய ரம்புக்கனை கேகாலை யட்டியாந்தோட்டை வரக்காபொல கலிகமுவ ஆகிய பிரதேச செயலக பகுதிகளுக்கும் நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதி மற்றும் ரத்தினபுரி மாவட்டத்தின் வெலிகேபொல மற்றும் கொலன்ன பிரதேச செயலக பகுதிகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்காக 10 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது.

மேலும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்காக விமானப் படையின் இரண்டு விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள தாக இலங்கை விமானப் படை தெரிவித்துள்ளது. (ந-7,10)

# வன்முறைக் கும்பல் அடாவடி ஒருவர் மீது வாள்வெட்டு

## அச்சுவேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அச்சுவேலி கைத்தொழில் பேட்டை பகுதியில் உள்ள பண்ணையொன்றில் நேற்று பெருமளவானவர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து வன்முறையில் ஈடுபட்டுள்ளதோடு ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று மதியம் குறித்த பண்ணைக்கு வந்த சிலர் அங்கு நின்ற ஒருவர் மீது வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில்,

மீண்டும் நேற்று இரவு 8 மணியளவில் இருபது வரையான மோட்டார் சைக்கிள்களில் கும்பலாக வந்தவர்கள் பண்ணையில் உள்ள வீட்டில் பெருமளவு சேதங்களை ஏற்படுத்தி தீவைத்து சென்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்பகையே குறித்த தாக்குதலுக்கு காரணம் என சந்தேகிக்கும் அச்சுவேலி பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7.10,33)

# பாதிக்கப்பட்டோருக்கு உடனடி நிவாரணம்

## ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக உடனடியாக நிதி வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, மாவட்ட செயலாளர்களுக்கு தேவையான நிதியை உடனடியாக ஒதுக்குமாறு, நிதி அமைச்சின் செயலாளருக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதைவேளை சீரற்ற வானிலை காரணமாக 20 மாவட்டங்களில் 3,727 குடும்பங்களைச் சேர்ந்த 11,864 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் 15 பேர் உயிரிழந்துள்ளதாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ந-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

05

இக்கிளர்ச்சியின் முன்னணியில் நின்ற தோட்டத் துரைமாரையும், வர்த்தகரையும் ஊக்குவித்தவை, தம் தொழிலின் முன்னேற்றத்துக்குத் தேவைப்பட்ட விடயங்களேயன்றி மனித உரிமைகளைப் பற்றிய பிரச்சினைகளுமல்ல, பாமர மக்களின் சமூக நலனுமல்ல.

இக்கிளர்ச்சிக்கு ஆள்பதிகள் செவிசாய்க்க மறுத்தனர். தோட்டத் துரைமார், வர்த்தகர், பறங்கியர் யாவரும் தமது சுயநலத்தில் கருத்துடையவர்களேயன்றி பொது மக்களுக்காகப் பேச அருகதையற்றவர்கள் என அக்காலத்து ஆள்பதிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

பறங்கியரைப் பற்றி உவாட் கூறியதாவது, "அவ்வகுப்பினருக்கு சட்டமியற்றும் பெரும் அதிகாரங்களை ஒப்படைத்தல், அதி தீங்குகளை விளைவிக்கும். அவர்கள் நல்ல சேவையாளர்கள், ஆனல் பொல்லா எசமானர்கள்" என்றார்.

1854 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 இல், ஏறத்தாழ நூறு கோப்பித் தோட்டத் துரைமார் கண்டியில் ஒன்று கூடித் தமது நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்கென இலங்கைத் தோட்டத்துரைமார் சங்கத்தை (The Planters' Association of Ceylon) நிறுவினர். 1855 இல் ஐரோப்பியருக்கு ஒரு சிறு சலுகை காட்டப்பட்டது. இலங்கை வர்த்தகர் சங்கமும், தோட்டத் துரைமார் சங்கமும் தமது சட்டசபை உறுப்பினரைத் தாமே தெரிந்து கொள்ளலாமென அரசாங்கம் அனுமதித்தது.

### நிர்வாக குடியியற் சேவை சீர்திருத்தப்படல்

கோல்புறூக் சீர்திருத்தங்கள் அமுல் செய்யப்பட்டதன் விளைவாக குடியியற் சேவை திறமையிற் குறைந்ததுடன் குடியியற் சேவையாளரின் திறமையை ஊக்குவிப்பதற்கு ஆதாரமாகவிருந்த காரணிகள் யாவும் மறைந்தன.

அவர்களின் வேதனங்கள் குறைக்கப்பட்டன. ஓய்வுச் சம்பளங்கள் நிராகரிக்கப்பட்டன. பதவி உயர்வு மிகவும் மெதுவாக நடந்தது. சேவையாளரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. பதவி உயர்வு மூப்பு அட்டவணையின்படி நிகழ்ந்தது.

### குடியியற் சேவையில் 1837, 1839 ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்கள்

கோல்புறூக் சிபார்சுகள் நடைமுறைக்கு வந்த நான்கு ஆண்டுகளுக்குள் 1837 இல், அதில் முதல் திருத்தங்கள் செய்யப்பட்டன. சேர் றொபட் ஹோட்டன் குடியியற் சேவையாளரின் சம்பளங்கள் அளவுக்கு மிகுதியாகக் குறைக்கப்பட்டு விட்டன என்றும், இக்குறைந்த சம்பளத்துடன் குடியியற் சேவையில் கல்வியறிவும், கௌரவமும் உடைய இளைஞரைச் சேரத் தூண்ட முடியாது என்றும், பழைய சேவையாளர்களின் குறைக்கப்பட்ட ஓய்வுச் சம்பளங்களை அதிகரித்தால் அவர்களுடைய 12 வருடகாலச் சேவை முடிந்த பின்பும் அவர்களைத் தொடர்ந்து சேவை புரிய வற்புறுத்தலாம் என்றும் எடுத்துக் காட்டினர்.

அவரது முயற்சிகளின் பேறாக, கனிஷ்ட குடியியற் சேவையாளர்களின் ஓய்வுச் சம்பளங்களும், பழைய சேவையாளர்களின் ஓய்வுச் சம்பளங்களும் உயர்த்தப்பட்டன. 1833 இற்குப் பின் சேவையில் சேர்ந்தோர்க்கு ஓய்வுச் சம்பளத் திட்டம் மறுக்கப்பட்டது.

1839 இல் ஆள்பதி ஸ்ருவட் மக்கன்ஸி, குடியியற் சேவையில் புதிதாகச் சேரும் அதிகாரிகள், ஆறு முதல் ஒன்பது மாத காலம் வரை ஓர் அரசாங்க முகவருக்குக் கீழ் பயிற்சி பெற்று, அவரது சிபார்சின் பேரில்தான் புதுப் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர், எனும் சட்டத்தை அமுல் செய்தார்.

### குடியியற் சேவையில் 1845 ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்கள்

1837-1839 ஆம் ஆண்டுகளின் திருத்தங்கள் ஓரளவுக்கு குடியியற் சேவையின் குறைகளைப் போக்கினாலும், அவை அச்சேவையின் அடிப்படையான இன்னல்களை நீக்கவில்லை. குறைந்த சம்பளங்கள், பதவி உயர்வுகளுக்கு வாய்ப்பின்மை, ஓய்வுச் சம்பளமின்மை போன்ற காரணங்களினால் சேவையின் தரமும் திறமையும் ஆண்டு தோறும் குறைந்து கொண்டே வந்தன.

இவ்வீழ்ச்சியை நிறுத்திச் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கு ஹோட்டன், மக்கன்ஸி, கொலின் கம்பல் எனும் ஆள்பதிகள் ஓயாமல் வற்புறுத்தி வந்த திருத்தங்களை மேலதிகாரிகள் பொருட்படுத்தவில்லை. ஈற்றில் 1845 ஆம் ஆண்டு குடியேற்ற நாட்டுச் செயலாளரான ஸ்ரான்லி பிரபு (Lord Stanley) இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க முற்பட்டார்.

அவர், ஆள்பதிகளின் ஆலோசனைகளைக் கேட்டும், இந்திய குடியியற் சேவையிலிருந்து பெறப்பட்ட அனுபவங்களைக் கொண்டும் பல திருத்தங்களை அனுமதித்தார். அவரது அனுமதியின் பேரில், சேவையாளரின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டன. ஓய்வு காலச் சம்பளங்கள் மீண்டும் அமுல் செய்யப்பட்டன.

பதவி உயர்வுக்குச் சேவையாளர் சுதேச மொழிகளைக் கற்றுத் தேர்ச்சி பெறுவது அத்தியாவசியமாக்கப்பட்டதுடன், சேவைக் காலத்துக்குப் பதிலாகத் திறமை முதலிடம் பெறவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது.

பதவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. சேவையிற் சேர்வதற்குப் புதுமுகப் பரீட்சையொன்று ஏற்படுத்தப்பட்டது. ஈற்றில் சேவையாளர், விவசாயம், வியாபாரம், வர்த்தகம் எனும் முயற்சிகளில் ஈடுபடலாகாது என்றும் சட்டமியற்றப்பட்டது.

இச்சீர்திருத்தங்களின் பயனாக கோல்புறூக்கின் 1833 ஆம் ஆண்டுத் திருத்தங்கள் யாவும் நிராகரிக்கப்பட்டு, 1832இற்கு முன் குடியியற் சேவையைக் கட்டுப்படுத்திய பழைய விதிகளே மீண்டும் நடைமுறைக்கு வந்தன என்பது புலனாகும்.

கூடின சம்பளம், ஓய்வுக் கால வேதனம், ஒழுங்கான பதவியுயர்வு எனும் அனுகூலங்கள் சேவையாளரை நற்சேவை புரிய ஊக்குவித்தன. தனி முயற்சிகளில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டதனால் சேவையாளர் தம் முழு உழைப்பையும் அரசாங்கக் கருமங்களில் செலவிட்டனர்.

### மாகாணங்களின் விரிவாக்கமும் நிர்வாகமும்

இரண்டாவதாக, கோல்புறூக் சிபார்சு செய்த மாகாணங்களின் விசாலத்தைக் குறைப்பதும், அவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பதும், இன்றியமையாததென ஆள்பதிகள் வற்புறுத்தி வந்தனர். கோல்புறூக் ஏற்படுத்திய ஐந்து மாகாணங்கள் ஒவ்வொன்றினதும் நிலப்பரப்பு மிகவும் விசாலமாக இருந்தமையினால் குடியியற் சேவையாளர், மாகாணத்தில் வசித்த மக்களின் நலன்களைக் கண்காணிக்க முடியாமற் போயிற்று.

எனவே, பிற்போக்கான நிலையிலிருந்த மாகாணங்களின் மேல், கூடுதலான அவதானம் செலுத்தும் பொருட்டு அவற்றைப் பகுத்துச் சிறு மாகாணங்களாகச் சிருட்டித்தல் வேண்டுமெனப் பலரும் உணர்ந்தனர். இத்துறையில் முதற் திருத்தம் 1845 இல் நிகழ்ந்தது.

மேல்மாகாணத்தில் இடம் பெற்ற ஏழு கோறளைகள், புத்தளம், சிலாபம் எனும் பகுதிகள், வடமேல் மாகாணமெனப் புதிதாக அமைக்கப்பட்டது. புத்தளம் அதன் தலைப்பட்டணமாயிற்று. 1856 இல் தலைப்பட்டணம் குருநாகலுக்கு மாற்றப்பட்டது.

### கோல்புறூக் சீர்திருத்தங்களால் ஏற்பட்ட கோப்பியின் வளர்ச்சி

கோப்பிச் செய்கையின் ஆரம்ப முயற்சிகள் பற்றி முன்னர் பார்த்தோம். 1833 ஆம் ஆண்டின் கோல்புறூக் சீர்திருத்தங்கள் மேலும் இலங்கையில் தனியார் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தன.

பிறநாட்டவர்கள் எவ்வித இடையூறுகளுமின்றி நிலங்களை வாங்கும் வாய்ப்பை பெற்றமை, நிலவரி நீக்கப்பட்டமை, இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமை, அரசாங்கம் வியாபார ஏகபோக உரிமைகளைக் கைவிட்டமை, இவை யாவும் இலங்கையில் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை முறை துரிதமாக வளர்ச்சியடைவதற்கு வேண்டிய சூழ்நிலைகளைப் பெற்றுத்தந்தன.

முதலும் முயற்சியுமுடைய ஆங்கிலேயர், அயன மண்டலப் பயிர்களை வளர்த்து நிறைந்த செல்வத்தைச் சம்பாதிக்க, இத்தீவினைப் போன்ற வாய்ப்புக்களையுடைய ஒரு நாட்டை உலகத்தின் வேறெந்தப் பகுதியிலும் காணவில்லை.

### ஐரோப்பாவில் கோப்பிக்கு ஏற்பட்ட கிராக்கி

ஐரோப்பாவில் கோப்பிக்கு ஏற்பட்ட மதிப்பு மின்னல் வேகத்தில் அதிகரிக்கவே, இலங்கையில் சிறு முயற்சியாக நடைபெற்று வந்த கோப்பிப் பயிர்ச் செய்கையால் அதனை ஈடு செய்யமுடியவில்லை. ஐரோப்பிய முதலாளிகளும் வர்த்தகர்களும், இத்தீவில் ஒரு பெரும் இலாபம் தரும் முயற்சியை அமைப்பதற்கு, சூழ்நிலை வாய்ப்பானதாக இருப்பதைக் கண்டனர்.

1835இற்குப் பின்னர் இலங்கையில் கோப்பிச் செய்கை வியப்புக்குரிய வேகத்துடன் மலை நாடெங்கும் பரந்தது. தோட்டங்கள், மலைநாட்டின் சகல பாகங்களிலும் திறக்கப்பட்டன. அடர்த்தியான காடுகளினால் மூடப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் கோப்பி பயிரிட ஆரம்பிக்கப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கம்...

கான வைத்திய நிலையம் ஜனாதிபதியால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையில் பிக்குகளுக்காகக் கட்டப்பட்ட முதலாவது வைத்திய சாலை இதுவாகும். நம் நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் பிக்குகளுக்கான விடுதிகள் மட்டுமே இருந்தன.

இந்த மருத்துவமனையானது நோய் வாய்ப்பட்ட பிக்குகளுக்காகக் கட்டப்பட்டுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி.

அரசாங்கத்தையும் பௌத்தத்தையும் பிரிக்க வேண்டியது அவசியம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

அதன் சட்டத் தன்மை பற்றி சிந்திக்கும்போது, நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் அவரவர் விருப்பப்படி ஒரு மதத்தைப் பின்பற்ற உரிமை உண்டு.

மேலும் எந்த மதத்திலும் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்கான உரிமையும் உள்ளது.

எந்தவொரு அரசாங்கமும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.

அந்தப் பொறுப்பு தற்போதைய அரசாங்கத்துக்கும் உள்ளது.

இதற்கு ஆதரவளிக்கத் தவறுவது அரசியலமைப்புக்கு எதிரானதாகும். அரசியலமைப்பின் சட்ட ஏற்பாடுகள் பற்றி எவரும் விவாதிக்கலாம் ஆனால், கோட்பாடுகள் தொடர்பில் விவாதிக்க முடியாது.

அரசாங்கம் என்ற வகையில் அதனைப் பின்பற்ற வேண்டும். இதை மாற்ற விரும்புவோர் அரசியலமைப்பையே மாற்ற வேண்டும்” என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ந-7,10)

## கிணற்றுக்குள்...

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

சிறுவனுடைய தாய் மற்றும் தந்தை இருவரும் பணி நிமிர்த்தம் வெளியே சென்றிருந்த நிலையில் மேற்படி சிறுவன் கிணற்றில் தண்ணீர் எடுக்க முற்பட்ட வேளையில் கிணற்று வாளிக் கயிறு அவிழ்ந்து சிறுவன் கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவனுடைய சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-7,10,30)

## குளத்தில்...

நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை நாரந்தனை தெற்கு சூரியவத்தை பகுதியைச் சேர்ந்த 11 வயதுடைய நிரஞ்சன் நிதுசா மற்றும் 5 வயதுடைய நிரஞ்சன் அனுஷ்கா ஆகிய சகோதரிகளே உயிரிழந்துள்ளனர்.

குறித்த இரு சிறுமிகளும் வீட்டில் இருந்து துவிச்சக்கரவண்டியில் கடைக்கு பால் வாங்கச் சென்றுள்ளனர். பால் வாங்கச் சென்ற இருவரையும் காணவில்லை எனக் குடும்பத்தினர் தேடியபோது, கடைக்கு சற்றுத் தொலைவில் உள்ள குளத்திற்குள் இருவரும் சடலமாக காணப்பட்டுள்ளனர்.

குளத்தின் வரம்பு வழியாகத் துவிச் சக்கர வண்டியைச் செலுத்தியவேளை அருகில் இருந்த கல் தடக்கி, துவிச் சக்கரவண்டியுடன் தவறி இருவரும் குளத்துக்குள் விழுந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இரு சிறுமிகளின் சடலங்களும் மீட்கப்பட்டு , ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மரண விசாரணை அதிகாரி நாகராஜா தியாகராஜா மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண் பிள்ளை கடந்த வருடம் விபத்தில் உயிரிழந்த நிலையில், தற்போது இருவர் உயிரிழந்தமை அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இருவரது சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ந-7,10)

## யாழிலும்...

ராட்சிப் பகுதி களில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது

குறிப்பாக புலோலிப் பகுதியில் வீசிய கடும் காற்று காரணமாக பனை மரம் முறிந்து வீழ்ந்ததனால் புலோலி பகுதியில் மின் தடங்கல் ஏற்பட்டது.

அச்சமயம் மருதங்கேணி மார்க்கத்தில் இருந்து மந்திகை வரையுள்ள மின் வழங்கல் பகுதியில் வல்லிபுரம் ஆனைவிழுந்தான் சந்திக்கும் - உதய கதிர்காமம் கந்தமுருகேசனார் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் பனை மரம் முறிந்து பிரதான மின் வடங்களை அறுத்ததனால் அப்பகுதியில் மின் சாரம் தடைப்பட்டதுடன் அவ் வீதி தடை செய்யப்பட்டிருந்தது. (ந-7,10,60)

## ரணில்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்திய பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த பேச்சுவார்த்தைகள் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 17ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான கட்சியின் நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ளமையால் குறித்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (ந-7,10)

## பாட...

தெரிவித்துள்ளது.

இதேவேளை இன்று வட மாகாணப் பாடசாலைகளில் நடைபெறவிருந்த தவணைப் பரீட்சைகள் இன்னொரு தினத்தில் நடைபெறுமனவும் இன்றைய தினம்ஆசிரியர் நியமனத்தைப் பொறுப்பேற்க விருந்த புதிதாக நியனம் பெற்ற ஆசிரியர்கள் நாளைய தினம்தமதுகடமையைப் பெறுப்பேற்கலாமெனவும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (ந-7,10)

## கன...

இடியுடன் கூடிய மழையுடன் பலத்த காற்று மற்றும்மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய விபத்துக்களை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கோரியுள்ளது.

கடும் மழை, வெள்ளப்பெருக்கு, மற்றும் மண்சரிவு அபாயம் காணப்படும் பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி உடனடியாக நகருமாறு இடர் முகாமைத்துவ நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன் அவசர நிலைமைகளின் போது அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம்

அவசர தொலைபேசி இலக்கம் :- 117

இடர் முகாமைத்துவ நிலையம் :- 0112136222/0112670002/0112136136

பொலிஸ் :- 0112421111 என்பனவே அவையாகும். (ந-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.06.02
சீட்டிழுப்பு இலக்கம் 5492
S 6 0 4 9 1
அத சம்பத
S 0 4 9 1
சீட்டிழுப்பு இலக்கம் 67

தன நிதானய
திகதி - 2024.06.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1522
Y 26 39 50 60 Y
Double Chance 19476

மெகா பவர்
திகதி 02/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1840
H 13 03 04 36 57
27633

லக்கி 7 VIP
திகதி 2024.06.02
சீட்டிழுப்பு இலக்கம் 318
V 8 3 4 1 2 1 V

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3734
சீட்டிழுப்பு திகதி 02.06.2024
O 10 36 42 76
O 45424

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.02
சீட்டிழுப்பு இலக்கம் 0801
மேஷம் 21 29 47 48 மேஷம்
31057 19

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.06.2024 வெற்றி வாரம் 200 வர்ணம் பழுப்பு
L 9 0 7 3 4 3
42383 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் 23,241,604.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2466 02.06.2024 ஞாயிறு
01 08 19 34 I
80987
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,266,811.20

சனிதா
திகதி 2024.06.02 வெற்றி வாரம் 4627
20 30 31 64 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,450,015.20
91394

சசிரி
வெற்றி வாரம் 484
சீட்டிழுப்பு திகதி 2024.06.02
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 28 35 36
36002
ரூ 2,022,600/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4178 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.06.02 தினம் ஞாயிற்றுக்கிழமை
03 25 33 60 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,787,097.60
448248

கப்றுக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 23 54 63 65 67
1642 மஞ்சள் 02.06.2024 ஞாயிறு
265244
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 525,529,062.20

ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.117,136,692.80
02 12 46 48 L
701700


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (1020)

076 825 7716 (ஆகாஸ்)



## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் அழகுக் கலைப் பொருட்கள் (Fancy Items) கிறீம் வகைகள் மற்றும் கவறிங் நகைகள் விற்பனை செய்யும் வியாபார நிலையத்திற்கு வேலைக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் தேவை.

தொடர்புகளுக்கு :

077 122 1289

(C-0514)



## விற்பனைக்கு

பனை மரத்திலான கொட்டில்கள் மற்றும் வாங்கு மேசை, இதர பொருட்கள் கல்வி நிறுவனத்திற்கானது விற்பனைக்கு உண்டு. (1059)

077 759 3725
077 666 9950



## மாப்பிள்ளை தேவை

- வட்டுக்கோட்டை, இந்து கௌரவகுலம், 1984, புனர்பூசம், Business management, Divorce, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- மானிப்பாய் - பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம், 1994, சதயம், Graduate, கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- சாவகச்சேரி, இந்து கௌரவகுலம், 1996, அனுசம், BBA, கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- கட்டுவன், இந்து, கௌரவகுலம், 1980, பரணி, Graduate, Divorce, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- வேலணை - புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம், 1992, பூரம், ACCA, Accountant, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- அச்சுவேலி, இந்து, கௌரவகுலம், 1992, திருவாதிரை, Graduate, Accountant, UK, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- அல்வாய், இந்து, கௌரவகுலம், 1981, புனர்பூசம், Business Management, Accountant பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- சுண்டிக்குளி - சுன்னாகம், இந்து, கௌரவகுலம், 1986, பூரட்டாதி, MBBS Doctor, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- சண்டிலிப்பாய் - மல்லாகம், இந்து, கௌரவகுலம், 1995, பூரம், Graduate, Swiss பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

(1064)

S.Sharma J.P Astrologer
- 077 539 3728
- 077 803 8193



## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (1035)

074 17 37 684



A/L தொழினுட்பப்பிரிவு

## Techna
Technical Institute

தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்

புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2026 -பிரிவு 02
03.06.2024 திங்கட்கிழமை மாலை 3.30மணிக்கு

செயன்முறை வகுப்புக்களும் நடைபெறுகின்றன

A/L 2023 REPEAT BATCH
paper classses, Theory classes, செயன்முறை வகுப்புக்களும் நடைபெறுகின்றன

விஷேட பிரிவுகள்
A/L 2024 பிரிவு
A/L 2025 பிரிவு

மேலதிக விபரங்களுக்கு 077 170 3549
விரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம். (1071)



## V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0513)



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER
- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (ஊக்கத்தொகை உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0513)

V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777



## TECHNO WORLD
TECHNO WORLD INNOVATIVE IDEAS OPEN NEW WORLD
### தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு
### BIO SYSTEMS TECHNOLOGY

| NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேனுஜன் | A2B | 1(Kli) | யக்சிகா | 2AC | 8 | அபிராம் | B2C | 22 |
| கோபிகா | B2C | 2 | அபிசனா | 2CS | 8 | திவ்யா | ABC | 27 |
| புவனயா | 3C | 2 | சிவகௌரி | A2B | 9 | மதுசாந் | 2BC | 33 |
| ஆர்த்திகன் | 2AB | 3 | சிலோஜினி | A2B | 11 | கேசிகன் | BCS | 40 |
| கார்த்திக் | BCS | 3 | விதுசன் | A2B | 13 | நுஸ்ரா | 2CS | 42 |
| திருக்குழலி | B2C | 3 | லிதர்சன் | C2S | 14 | மதுசா | 3C | 44 |
| பஸ்லான் | B2C | 4 | வனஜா | 3B | 16 | பிரதிக்சா | BCS | 44 |
| சயன்தன் | 2CS | 4 | றயிதா | C2S | 17 | கோவர்தனன் | 3C | 46 |
| தர்சிகா | ABC | 5 | றோசிகா | B2C | 18 | கவிபிரிதா | 2CS | 47 |
| கயதீபன் | C2S | 5 | வேனுயா | A2C | 18 | லுயின்சியா | 3C | 49 |
| ஜெனிஸ்ராலன் | 2AB | 5 | விதுசா | ABC | 19 | பாலசபேசன் | 2CS | 53 |
| கிருத்திகா | C2S | 6 | தர்சிகா | 2BC | 20 | குமுதினி | BCS | 53 |
| கிருசாந்தன் | 3B | 8 | கயானி | 2BC | 21 | தனுயன் | 3C | 55 |

பொறியியல் தொழில்நுட்ப பிரிவு
### ENGINEERING TECHNOLOGY

| NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுசுதன் | 2BC | 1(Mull) | அஸ்கி | C2S | 12 | அஜய் | 2CS | 36 |
| வியயதாஸ் | 2AB | 3 | மதுசுதன் | A2B | 13 | பிரவண்யா | 3C | 38 |
| கரால்ட் பிரனவன் | B2S | 3 | அபால் | C2S | 14 | யதுசன் | 3C | 41 |
| பிரகலாதன் | BCS | 3 | பவித்திரன் | C2S | 14 | சுகிர்தன் | BCS | 43 |
| லஜீவ் | 3C | 4 | நிதர்சன் | 3B | 18 | பிரசன்னா | BCS | 44 |
| கயானன் | 2AB | 5 | அனோயன் | A2C | 20 | அஸ்வின் | B2C | 45 |
| கிருத்திகா | C2S | 6 | றிசாந் | 2BC | 21 | துவாகரன் | 3C | 48 |
| சாங்கீதன் | 2CS | 6 | ரஜீவன் | 2BC | 24 | கிருத்திகன் | C2S | 52 |
| கிறிசோன் | A2B | 8 | கிருசன் | A2B | 25 | சகீரா | ABC | 54 |
| ஜெனிஸ்ரன் | 2CS | 8 | சுவர்னன் | B2C | 26 | அம்சன் | 3C | 55 |
| இனியவன் | 2CS | 9 | டிவ்யா | ABC | 27 | யூட்கனிஸ்ரன் | 3C | 56 |
| தர்சன் | C2S | 10 | யதுர்சன் | 2BC | 32 | நிறோஜன் | 2CS | 57 |
| திஸ்சந்தன் | A2B | 10 | மைகல் | 2BC | 33 | மாதங்கி | 3C | 58 |

### A/L 2023 Day class
ஆரம்பம் : 07.06.2024 (வெள்ளிக்கிழமை)
நேரம் : மாலை 2.30 Pm
(C-0508)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### கீர்த்திகா பத்மலோஜன்

மாவட்ட நிலை - 1
தேசிய நிலை - 44
வணிகப்பிரிவு - 3A
யாழ் இந்து மகளீர் தேசியப் பாடசாலை

கடந்த வருடம் (2023 ஆம் ஆண்டு நடைபெற்ற G.C.E க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வணிகத்துறையில் யாழ் இந்து மகளீர் கல்லூரியில் இருந்து தோற்றி 3A சித்தியினைப் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்தமையினையிட்டு மன மகிழ்வுடன் மனதார வாழ்த்துகின்றோம். மேலும் கல்வியில் சிறந்து விளங்கிட அன்புடன் வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர் :
அப்பா, அம்மா,
தம்பி, தங்கை,
அப்பம்மா, அம்மம்மா,
சித்தாமார், சித்திமார்,
மாமாமார், அத்தைமார்.

Congratulations


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 181 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org